JANASAKTHI போன்: 84097 4 பக்கம் ஒரு அணா மலர் 8 இதழ் 274 இலங்கை 10 சதம் REGD. NO. M. 5934

ஜனசக்தி

சென்னை | நந்தன, புரட்டாசி 4உ | வெள்ளிக்கிழமை | 1952, செப். 19
இவெளியூர் | நந்தன, புரட்டாசி 5உ | சனிக்கிழமை | 1952, செப். 20

சோவியத் மக்களுக்கு பிரிட்டிஷ் பெண்கள் பாராட்டு

மாஸ்கோ, செப். 18—

பதினைரு பிரிட்டிஷ் பெண்கள் கொண்ட தூது கோஷ்டி ஒன்று சோவியத் ருஷ்யாவிற்கு விஜயம் செய்து ஒரு மாத கால சுற்றுப்பிரயாணத்தை முடித்து பிரிட்டனுக்குத் திரும்பும் வழியில் இன்று பிராக் நகர் வந்திருக்கிறது.

அங்கு பத்திரிகையாளர் மகாநாட்டில், "சோவியத் மக்கள் இவர்களுடைய சமாதான சர்வ வியாபக தேச அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதினின்றும்; ஒரு அணுகுண்டு யுத்தம்கூட அவர்களை தடுத்து நிறுத்தி விட முடியாது" என்று அவர்கள் அறிவித்தார்கள்.

600 விசேஷ ஆயுதப்போலீஸ் டிஸ்மிஸ் 15 நாள் செய்த வேலைக்கு சம்பளம் கொடுக்கவில்லை

சென்னை, செப். 18—

செட்ஹில்ஸ் கேம்ப் ஸ்பெஷல் ஆர்ம்ட் போலீஸ் 1 வது பட்டாலியனிலிருந்து சுமார் 600 கான்ஸ்டேபிள்களை 15-9-52 லிருந்து சென்னை சர்க்கார் வேலையிலிருந்து நீக்கிவிட்டது. செப்டம்பர் மாதம் 15 தினங்கள் வேலை செய்த சம்பளத்தைக்கூட கையில் கொடுக்காமல் வெறும் ரயில்வே வாரண்டை மட்டும் கொடுத்து விட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். 2 வருடங்கள் வேலை செய்ததற்கு அத்தாட்சிப் பத்திரம் கூட கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. 2 வருடங்கள் மக்கள் இயக்கத்தை அடக்குவதற்கு உபயோகப்படுத்திக்கொண்டுவிட்டு, இப்பொழுது வேலைக்கு உத்திரவாதமின்றி அவர்களை சர்க்கார் நடுத்தெருவில் விட்டுவிட்டது.—(ஈ. கி.)

நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ் சரிகிறது!

புதுக்கோட்டை, கரூர் காங்கிரஸ் கமிட்டித் தலைவர்கள் படுதோல்வி

3 வார்டுகளிலும் காங்கிரஸ்காரருக்கு நாமம்

திண்டுக்கல் தோழர் பாலு இரண்டு வார்டிலும் வெற்றி

கூட்டணிக்கு மேலும் பல வெற்றிகள்

சென்னை, செப். 19—

நகரசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் தோல்விப் படலம் ஆரம்பமாய்விட்டது. கடந்த பொதுத்தேர்தலின்போது, தினந்தினம் காங்கிரஸ் பெருந்தலைகளின் தோல்விச் செய்திகளைப் பத்திரிகைகளில் பார்த்து வந்தோம். அம்மாதிரியே இந்தத் தேர்தலிலும் காங்கிரஸ் பெரும் புள்ளிகளின் தோல்விச் செய்திகள் வர ஆரம்பித்துவிட்டன. காங்கிரஸாட்சியின்மீது மீண்டுமொருமுறை மக்கள் தீர்ப்புக்கூற முன்வந்துள்ளனர்.

புதுக்கோட்டை நகரசபை ரஸ் நகரசபைத் தலைவர் திரு. ... வில் 28ல் 10 ஸ்தானங்களைத்தான் காங்கிரஸ் பெற முடிந்துள்ளது. டவுன் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. ஜி. ஆர். ... தோற்கடிக்கப்பட்டு, ஜாமீனையும் இழந்தார்.

தாலுகா காங்கிரஸ் கமிட்டி நகரசபைத் தேர்தலில் ... கருப்பண்ணன் ... அபேட்சகர் ... தோற்கடித்தார். ...

எஸ். வி. சிவசாமி சேர்வை (முனிசிபல் சேர்மன்) 3 வார்டுகளில் தேர்தலுக்கு நின்றார். 3 வார்டுகளிலும் அவருக்கு மக்கள் பட்டை நாமத்தை சாத்திவிட்டனர்.

கரூரில் டவுன் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. ஜெயராம் நாயுடு தோற்கடிக்கப்பட்டார். சோமு என்னும் கே. எஸ். ராமசாமி (கம்யூனிஸ்ட்) வெற்றிபெற்றார். (ஓட்டுகள் காங்கிரஸ் 301; கம்யூனிஸ்ட் 440).

...: 12-வது வார்டு தோழர் ... 19-வது வார்டு ... (தி. க. காரியதரிசி)

திண்டுக்கல்லில் தோழர் பாலுவுக்கு 2 வார்டுகளிலும் வெற்றி

தமிழ்நாடு தொழிற்சங்கக் காங்கிரஸ் பொதுக்காரியதரிசியான தோழர் ஏ. பாலசுப்பிரமண்யம் (கூட்டணி அபேட்சகர்) 2 வார்டுகளில் வெற்றி பெற்றுள்ளார்.

தோழர் என். கிருஷ்ணசாமியும், இன்னும் 3 கூட்டு முன்னணி அபேட்சகர்களும் வெற்றிபெற்றுள்ளனர்.

திருவண்ணாமலை நகரசபையில் 28 ஸ்தானங்களில் 11-ஐ தான் காங்கிரஸ் பெற்றது.

அனந்தப்பூர் நகரசபைத் தலைவர் திரு. பி. ராமாச்சார்லு 2 ஓட்டுகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார்.

திருநெல்வேலியில் காங்கி...

கொள்ளையோ, கொள்ளை! அ.இ. காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திற்கு ரூ. 1,25,000 செலவு!

இந்தூர், செப். 19—

சமீபத்தில் இந்தூரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்கு சுமார் 1,25,000 ரூபாய், மத்ய பாரத் பிரதேச காங்கிரஸ் கமிட்டிக்கு செலவாயிற்றும். ஆனால் வசூல் ரூ. 60,000 தான ஆயிற்றும. துண்டுவிழும் தொகைக்கு, நன்கொடை மூலம் இன்னொரு 30,000 ரூபாய் வசூல் செய்ய முடியுமென்று ம. பா. பி. காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கனயாலால் காதிவாலா கூறினர்.

விழுப்புரம் வெற்றிகள்

கூட்டணிசார்பாகப்போட்டியிட்டுவெற்றிபெற்ற தோழர் வி. கே. பாசல்கான் (வார்டு 1) நங்காரதம்பிள்ளை (7) டாக்டர் தியாகராசன் (9) தெய்வராயகம் (10) கன்னைய நாயுடு (12) நாகம்மாள் (12 ரிசர்வ் வேலாயுதக் கவுண்டர் (14) ஏழுமலை, (15) என். கோவிந்தராஜுலு நாயுடு (16) சாரங்கபாணிக்கவுண்டர் (17) பக்தவச்சலு நாயுடு (19), எம். ஷண்முக உடையார் (20), வாசுதேவன் (15).

காஞ்சீபுரம்

இங்கு 5 நகர சீர்திருத்தக் கழக முன்னணி அபேட்சகர்கள் வெற்றிபெற்றுள்ளனர். 1. சி. வி. ராஜகோபால் 2. செல்வராஜ 3. எம். பொன்னுசாமி முதலியார், 4. ஆள்வார், 5. வி. மோகனன்.

ஆம்பூர் 7 கூட்டணி அபேட்சகர் போட்டியின்றித் தேர்வு

இந்த 28 ஸ்தானங்களுக்கு நகர மக்கள் கூட்டணியின சார்பில் 7 பேர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காக்கினடா

34 ஸ்தானங்களில், ஏற்கனவே உள்ள கவுன்சிலர்கள் 7 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 5 ரிசர்வ் ஸ்தானங்களில் ஒரு கம்யூனிஸ்ட் பெண் தோழர், ஒரு பிரஜா கட்சிப் பெண, இரண்டு இருஸ்தவர் ஒரு சோஷலிஸ்ட் ஜெயித்தனர்.

மொத்தம் 7 கூட்டு முன்னணி அபேட்சகர்ள் ஜெயித்துள்ளனர்.

சிதம்பரம்

காங்கிரசுக்கு 10 ஸ்தானங்கள் தான் இடைத்துள்ளன. எதிர்க் கட்சிகளுக்கு 13 ஸ்தானங்கள் கிடைத்துள்ளன.

தொழிலாளி வர்க்க ஒற்றுமையை கட்டுக!

அருணா ஆசப்அலி அறைகூவல்

"நாங்கள் இந்நாட்டில்தான் வாழ்வோம் நேருதான் அமெரிக்கா செல்லவேண்டியவர்"

தோழர் டாங்கே, முழக்கம்

பம்பாய், செப் 18—

"இந்தியா பூராவிலுமுள்ள தொழிலாளிகளுக்கு, அவர்களின் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு நீங்கள்தான் தலைமை வகித்து வழிகாட்ட வேண்டும்" என்று பம்பாய் மில் மஸ்தூர் யூனியன் சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் இடதுசாரி சோஷலிஸ்ட் குழுவின் தலைவி, திருமதி அருணா ஆஸப் அலி கூறினர். தோழர் டாங்கேயும் இக்கூட்டத்தில் பேசினர்

திருமதி அருணா மேலும் பேசியதாவது:

"உங்களை எதிர் நோக்கியுள்ள பிரச்னைகள் தான் இன்று நாடு பூராவிலுமுள்ள தொழிலாளிகளையும் எதிர்நோக்கி நிற்கின்றன. போதிய உணவு, துணி மணிகள், வீடுகள் முதலியன" என்றார்.

தொழிலாளி வர்க்கம் ஒன்றுபட்டிருக்க வேண்டிய தின அவசியத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், "உங்களுடைய அணிகளின் மீது முதலாளி வர்க்கப் படையெடுப்பு ஏற்பட்டு அவை இன்று பிளவுபட்டுக் கிடக்கின்றன. தொழிலாளி வர்க்கம் பிளவைப் போக்கி ஒன்றுதிரண்டு, தன்னம்பிக்கையுடன் முன்வந்தாலல்லாது நாட்டில் இன்று நிலவும் நிலைமைகளை மாற்ற முடியாது. தொழிலாளிகள் தங்களுடைய நிலைமையை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக மட்டும் போராடவில்லை; ஆனால் சேற்றில் அழுந்தப் பட்டுக் கிடக்கும் நாட்டின் முன்னேற்றம் என்ற ரதத்தை மீண்டும் ஓட்ட ஆரம்பிக்கவும் போராடுகின்றனர் என்பதை தொழிலாளிகள் நிரூபிக்க வேண்டும்" என்றார்.

இறுதியில் ... காங்கிரஸ் ஆதிக்கத்திலுள்ள ஐ.என்.டி.யு.ஸி. யாலும் ... சோஷலிஸ்டுகளாலும் தவறு ... அழைத்துச் செல்லப்பட்டிருக்கும் தொழிலாளிகளுக்கு அறிவுபுகட்டி ஒற்றுமை வழிக்குக் கொண்டுவர வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

அடுத்தபடியாகத் தோழர் டாங்கே பேசுகையில் "கடந்த 40 வருடங்களாக எந்தத் தொழிற் சங்கக் கோட்பாடுகளுக்காகக் கம்யூனிஸ்டுகள் போராடிவந்தார்களோ, அதே கோட்பாடுகளைத்தான் தற்போது காங்கிரஸ்பின்பற்றி வருகிறது. அகில இந்தியத் துறையில் தொழிற் சங்கங்களை ஏற்படுத்துவதை முன்னொரு காலத்தில் காந்திஜி எதிர்த்தார். ஆனால் இன்று அகில இந்தியத் துறையில் ஐ. என. டி. யு. ஸி. ஏற்படுத்தப்பட்டுள்ளது" என்றார்.

தோழர் டாங்கே தொடர்ந்து பேசுகையில், சமீபத்தில் உஜ்ஜெயினியில் நேருவின கூட்டத்திற்கு ஊர்வலமாக ஆர்ப்பாட்டம் செய்துகொண்டு வந்த தொழிலாளிகளைப் பார்த்து, உங்களுடைய கொடிகளையும், போர்டுகளையும் தூக்கிக்கொண்டு உங்களுடைய சித்தாந்தம் எங்கிருந்து வந்ததோ அந்த நாட்டுக்குப் போங்கள்" என்று நேரு கூறியதாக பத்திரிகைகளில் வந்த செய்தியைக் குறிப்பிடுகையில், "நாங்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள், "நாங்கள் இங்குதான வாழ்வோம். நேருதான் அமெரிக்காவிற்குச் செல்லவேண்டியவர்" என்று டாங்கே கூறியதும், கூட்டத்தினர் பலத்த கரகோஷம் செய்தனர்.

இறுதியில், இந்தூரிலுள்ள மாலவா மில்லைச் சேர்ந்த 2 தொழிலாளர் தலைவர்களின மீது மத்யபாரத் ஹைகோர்ட் தூக்கு தண்டனை விதித்திருப்பதைரத்து செய்து, அவர்களின் தூக்கு தண்டனையை மாற்றவேண்டுமென்று இந்திய ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்ளும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மற்றொரு தீர்மானம் பூனா பாதுகாப்பிலாகா தொழிலாளிகளின் வேலை நிறுத்தத்தை ஆதரித்தது.

ஈடனுக்கு கொலைகாரன் டிட்டோ உபசாரம்

பெல்கிரேட், செப். 18—

பிரிட்டனுக்கும் - யுகோஸ்லேவியாவிற்குமிடையே அரசியல், பொருளாதாரத் துறைகளில் மிக நெருக்கமான நட்புறவு நிலவுவதாகவும், குறிப்பாக கடந்த நான்காண்டுகளாக இது பெருகி வளர்ந்திருப்பதாகவும், யுகோஸ்லேவிய மக்களின் கொலைகாரன், துரோகி டிட்டோ. பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி அந்தோணி ஈடனுக்கு அளித்த உபச்சார விருந்தொன்றில் பேசுகையில் குறிப்பிட்டான்.

பால்கனில் சோவியத் எதிர்ப்பணி உருவாக்கும் போர் வெறி நோக்கமுடன் ஈடன சுற்றுப்பிரயாணம் செய்கிறார்.

ராஜ்யத்தின் பல பாகங்களில் உணவுநிலைமை நெருக்கடி

சென்னை, செப். 19—

சென்னை ராஜ்யத்தில் ராயலசீமாவில் மட்டுமின்றி, இதர பல பாகங்களில் கூட உணவு நிலைமை மிகவும் நெருக்கடியாக இருப்பதாக சென்னை நிதி உணவு மந்திரி திரு. சுப்ரமண்யம் நிருபர்களிடம் அறிவித்தார்.

சென்னைக்கு அதிக உணவு தானியம் ஒதுக்க வேண்டுமென மத்திய சர்க்காரை சென்னை சர்க்கார் வற்புறுத்தி வருவதாக சர்க்கார் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஜனசக்தி நிதி

முன் வசூல்	626-14-0
இன்றைய வசூல்	7- 0-0
	633-14-0
பொன்மலை மகாநாட்டிற்குசென்ற திருச்செங்கோடு பிரதிநிதிகள்	3-0-0
ஆர். ஜே. கிருஷ்ணன் சென்னை	4-0-0
	7-0-0

சென்னை சட்டசபை

சென்னை, செப். 19—

சென்னை சட்டசபை அக்டோபர் மாதக் கடைசி வாரத்தில்தான் கூடுமென சர்க்கார் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

விடுதலை மனு தள்ளுபடி

ஹைதராபாத், செப், 18—

தன்னை விடுதலை செய்ய வேண்டுமென கம்யூனிஸ்ட் காவற் கைதி தோழர் ஆஷிக் கான செய்துகொண்ட ஹேபியஸ் கார்ப்பஸ் மனுவை, ஹைதராபாத் உயர்நீதிமன்ற பிரதம நீதிபதியும் மற்றொரு நீதிபதி ஸ்ரீனிவாசாச்சாரியும் தள்ளுபடி செய்தனர்.

ஈரான் யோசனை: பிரிட்டன் நிராகரிக்கும்?

எண்ணை சம்பந்தமாக அமெரிக்க - பிரிட்டிஷ் மோதல்

டெஹ்ரான், செப். 18—

எண்ணைப் பிரச்னை சம்பந்தமாக இறுதியான பிரேரணைகளை அறிவித்துவிட்டு, இதை பிரிட்டன் ஒப்புக்கொள்ளாவிட்டால் அந்நாட்டுடன் ஸ்தானீக உறவையும் முறித்துக்கொள்ளத் தயார் என ஈரானியப் பிரதமர் முஸ்ஸாதேக் கொள்கைப் பிரகடனம் செய்து 30 மணி நேரம் ஆகிவிட்டது.

முஸ்ஸாதேக்கின் இந்த இறுதியான பிரேரபணைகள் அமெரிக்கபிரிட்டிஷ் அரசியல் வட்டாரங்களை குழப்பத்திலாழ்த்தியுள்ளன. அடுத்தபடி இனி என்ன நடக்கும்என அவை திகிலுடன் கவனித்துக் கொண்டிருக்கின்றன.

முஸ்ஸாதேக்கின்புதிய பிரேரணைகளை எல்லா டெஹ்ரான் பத்திரிகைகளும் ஆதரித்து எழுதியுள்ளன. "எண்ணைப் பிரச்னை தீர இது தான் கடைசி வார்த்தை" என்று பொதுஜன ஆதரவுள்ள கீஹான் எனும் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. முஸ்ஸாதேக்கின் பிரேரணைகள் அதிகார பூர்வமாக ஒன்றிரண்டு நாட்களில் பிரிட்டனுக்கு சமர்ப்பிக்கப்படும்.

அமெரிக்க—பிரிட்டிஷ் முரண்பாடு

எண்ணை நிபுணர்களை ஐரோப்பாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வரவழைத்து, ஈரான் எண்ணைத் தொழிலை தொடர்ந்து நடத்த தன்னுடைய எண்ணைக் கம்பெனி உதவி செய்யும் என்று சமீபத்தில் ஈரானில் சுற்றுப் பிரயாணம் செய்த அமெரிக்கக் கோடீசுவர எண்ணை முதலாளி ஜோனஸ் கூறினர்.

சுத்தம் செய்யப்படாத ஈரானிய எண்ணையை சில அமெரிக்க எண்ணை முதலாளிகள் வாங்கத் தயாரென அவர் அறிவித்தார். ஈரானிலிருந்து எண்ணையைக் கொண்டு செல்ல சில எண்ணைக் கப்பல்கள் உபயோகப்படுத்தப்படுமென்றும், சிறிது நாட்களுக்கு முன்னர் இத்தாலிய எண்ணைக் கப்பலான 'ரோஸ் மேரி'யை பிரிட்டன தடுத்து நிறுத்தியது போல, அமெரிக்க எண்ணைக் கப்பல்களை தடுத்து நிறுத்த முடியாதென்றும் ஜோனஸ் அறிவித்தார்.

அபடான் எண்ணைத் தொழிற்சாலையை மீண்டும் தொடர்ந்து நடத்த அமெரிக்க கம்பெனிகள் ஈரானுக்கு உதவுமென்று இவர் கூறினர். பத்திரிகை நிருபர்களை இவர் நாளை சந்திப்பார்.

'ஈரான் எண்ணையை அமெரிக்கா வாங்க விடோம்'

பிரிட்டிஷ் அதிகாரி அறிவிப்பு

லண்டன், செப். 18—

பிரிட்டிஷ் முற்றுகையை உடைத்து, ஈரானுக்கு வெளியே எண்ணையைக் கொண்டு செல்ல யார் முயற்சித்தாலும், அதை பிரிட்டன் உறுதியுடன் தடை செய்யும் என்று பிரிட்டிஷ் சர்க்கார் அதிகாரி கூறினர்.

"ஈரானிய எண்ணையை அமெரிக்கா வாங்கும்" என அமெரிக்க கோடீசுவரர் ஜோனஸ் டெஹ்ரானில் கூறியதைக் குறிப்பிட்டு அவர் இவ்விதம் அறிவித்தார்.

1933ம் வருட ஒப்பந்தப்படி, ஈரானிலுள்ள எண்ணை முழுவதும் ஆங்கிலோ ஈரானிய எண்ணைக் கம்பெனிக்குத் தான் சொந்தமாகும். இது வெளியார் கைகளுக்குப் போவதை உறுதியாக பிரிட்டன் தடுக்கும் என்று அவர் திட்டவட்டமாகக் கூறினர்.

பிரேரணைகளை பிரிட்டன் நிராகரிக்கும்?

முஸ்ஸாதேக்கின் புதிய பிரேரணைகளை பிரிட்டிஷ் வெளி நாட்டிலாகா தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. ஈரா... ந்த இறுதியான பிரேரணைகளைக் கொஞ்சம் கூட ஒப்புக் கொள்ள முடியாதென பிரிட்டிஷ் வட்டாரங்கள் திடமாகக் கூறுகின்றன. ஆனல், ஈரானுடன் ஸ்தானீக உறவு முறிந்து போகாமல் தடுக்கவேண்டுமென்ற கருத்துடன், இப்பிரேரணைகளை மேலும் பிரிட்டிஷ் நிபுணர்கள் துருவி ஆராய்ந்து வருகிறார்கள்.

பாக்ஸ்தானீகர்

நான்கு மாத விடுமுறைக்கு பின்னல், பாக் ஸ்தானீகர் இன்று மீண்டும் பதவியேற்றார். இன்று காலை பிரதமர் முஸ்ஸாதேக்கை சந்தித்தார்.

அமெரிக்காவிடம் காவடி

வாஷிங்டன், செப். 18—

ஈரானின் பொருளாதார நிலைமை மிகவும் நெருக்கடியாயிருப்பதாகவும், எனவே அமெரிக்கா உடனடியாக உதவி செய்யாவிட்டால் நிலைமைக் கட்டுக்கடங்காது போகுமென்றும் அமெரிக்காவிற்கு புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள ஈரானிய ஸ்தானிகர் அல்லாயார்சாலே, அமெரிக்க வெளிநாட்டு மந்திரி அக்கேசனிடம் கூறினர்.

லெபனனில் ஜனதிபதி ஒழிந்தார்!

பொதுவேலை நிறுத்தத்திற்கு அரசாங்கம் பணிவு

மக்கள் கோரிக்கைகள் உதாசீனப் படுத்தப்பட்டதின் பலன்

பெய்ரூட், செப். 18—

ராஜினாமா செய்த லெபனன் ஜனாதிபதி பேசாரி எல். கோரி ராணுவ பாதுகாப்புடன் பிரான்சிற்கு விமானமூலம் பயணமாய் விட்டார் என்று விஷயமறிந்த வட்டாரங்களிலிருந்து தெரிகிறது.

அரசியல் ஊழலை எதிர்த்து திங்கட்கிழமை ஆரம்பித்த லெபனன பொதுவேலைநிறுத்தம் நேற்றுடன் மூன்று நாட்களாகின்றன.

18 எதிர்கட்சி சட்டசபை அங்கத்தினர்கள் ஜனாதிபதி ராஜினாமா செய்ய வேண்டுமென்று சட்டசபை தலைவருக்கு மனுப்போட்டனர்.

பிரிட்டன் சிரியாவையும், லெபனனையும் ஆக்கிரமித்து 2 வருடங்களுக்குபிறகு அதாவது 1943-ல் பேசாரி எல். கோரி லெபனன் குடியரசின் முதல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிரிட்டனும், பிரான்சும் லெபனனுக்கு சுதந்திரம் கொடுப்பதாக உறுதியளித்தன. 1943-ல் லெபனன் பாராளுமன்றம் கூடிய உடன் லெபனனுக்கு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டுமென்றும், அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்றும் தீர்மானம் செய்தது.

பிரான்ஸ் சுதந்திரம் கொடுக்க மறுத்தது.

பேசாரி எல். கோரி ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்த பிறகு தளபதி சேஹாப் பிரதமராகவும் அன்னிய நாட்டு மந்திரியாகவும் ஆகியுள்ளார்.

தீவிரமான சீர்திருத்தங்களை அமுலாக்க மறுத்ததாலும், மக்கள் அதிருப்தியுமே கோரியின வீழ்ச்சிக்கு காரணம என்று புதிய பிரதமர் கூறினர்.

நெருக்கடி 9 நாட்களுக்கு முன்னுல் ஏற்பட்டது. சாமிசோலா மந்திரி சபையில் இரண்டு பேர்கள் ராஜினாமா செய்ததால், மந்திரிசபையே விழ்ந்தது. மந்திரிசபை ஒட்டு மொத்தமாக பாராளுமன்றத்திடம் நம்பிக்கை தீர்மானம் பெறவேண்டுமென்று தீர்மானித்தபோதிலும் ... பிரதமர் சோலா ஒப்...ள்ள வில்லை என்று ...ராமா செய்துள்ள மந்திரிகள் கூறியுள்ளனர்.

இதற்கிடையில் பொதுமக்கள் ...ர்தல் சீர்திருத்தம், நிர்வா...ல் உள்ள ஊழல் ஒழிப்...

இந்திய பத்திரிகையாளர் ஆப்பிரிக்கா செல்ல அனுமதி மறுப்பு

தெ. ஆ. மந்திரி காரணம் கூற முடியாதாம்!

கேப்டவுன், செப். 18—

இந்திய பத்திரிகையாளரான திரு. எஸ். முல்கோகர் என்பவர் தென்ஆப்ரிக்காவில் வந்து 2 அல்லது 3 மாதங்களுக்கு சுற்றுப் பிரயாணம் செய்ய கேட்டதற்கு அனுமதி மறுக்கப்பட்டதன காரணத்தைக் கூற தெ. ஆ. உள்நாட்டு மந்திரி திரு. டோங்கர் மறுத்து விட்டார்.

"டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகையின் சார்பாக ஷ வேண்டுகோள் விடுக்கப்பட்டது,

அனுமதி மறுக்கப்பட்டது ... ஒரு இலாகாவின் விவகாரமாகும் ... இம்மாதிரி விஷயங்களிலெல்லாம் காரணம் கூறும் வழக்கமில்லை ... என்றும் அவர் இதிரே... கூறினர்.

ஜப்பானை யுத்த தளமாக்கியது அமெரிக்கா

அங்கு ஜனநாயகம் புதைக்கப்பட்டு விட்டது

மாலிக்கின் ஆணித்தரமான கண்டனம்

ஐக்கிய நாடுகள், செப், 18—

ஐக்கிய நாடுகள் சபைக்குள் ஜப்பானை அனுமதிக்கக் கூடாது என்று வாதாடும்போது சோவியத் பிரதிநிதி தோழர் ஜேகப் மாலிக் பேசியவற்றை நேற்று பிரசுரித்திருந்தோம். அதே பிரசங்கத்தில் அவர் மேலும் பேசியதாவது;

"ஜப்பானை ஒரு ஆக்ரமி... [illegible] ...ன் ஒரு ஆக்ர... புக் கருவியாக மாற்றியதி... ...வும், ராணுவ ... மூலம் ஐ. நா. சபை, கொரி... யுத்தத்தில் ...தையு... இழுத்து விட்டிருக்கிறது" என்றார்.

தன் ஐடைய ராஜ... [illegible] ...யும், கப்பற் ப... விமான படை... ...டும் ஐ. நா. உதவி செய்து வரு...றது என்று மாலிக் ... [illegible]

மேலும், ஜப்பானில் யுத்தத் தொழிற்சாலைகளும், ஆயுதக் கிடங்குகளும் ... ஐ. நா. ... அமைத்து வ... [illegible]

... இருக்கின்றன என்றும் "... அபாயம் தீரும் வரையில் அவை இருக்கும்" என்றும் பதில் கூறி அமெரிக்கப் பிரதிநிதி ஆஸ்டின் மழுப்பியிருக்கிறார்.

மாலிக் பதில்

இறுதியில் அமெரிக்காவுக்கு பதில் கூறுகையில் மாலிக் பேசியதாவது:

"ஜப்பானிய ராணுவ அமைப்பை மீண்டும் உயிர்ப்பித்திருப்பதாக நாங்கள் ...ங்கள் மீது குற்றம் ...ட்டுகிறோம். உங்களுக்கு ...ப்பானில் மூன்று முக்கிய ... இருக்கின்றன. (1) ...னிய மக்களைப் ...ரங்கி... யாக உபயோ...படுத்து... (2) ஜப்பானை ... ராணுவ, விமான தளமாக ... (3) ஜப்பானிய ...தொழில் ... தக் கிடங்குகளாக மாற்று...

"ஜப்பானிய... த்திற்கு அபாயம் ... [illegible]

தபால் தந்தி ஸ்தாபனங்களின் நூற்றாண்டு விழா

அடுத்த ஆண்டில் கொண்டாடப்படும்!

பம்பாய், செப். 18—

அடுத்த ஆண்டில் இந்தியாவின தபால் ... ஸ்தாபனங்களின் நூ... கொண்டாடப்... இந்தியாவின் ... மந்திரி திரு... கூறினர்.

இதற்காக வி... தலைகள் வெளியி... என்றும், பம்பாய், டில்லி, கல்கத்தா, சென்னை போன்ற இடங்களில் உள்ள தபால் ...ஸ்களில் பொருட்காட்சி ...ம், பலவேறு தபால் தலை சேகரிப்பு ஸ்...

"அபிப்பிராயம் வெளியிடும் சுதந்திரம் நமது பிறப்புரிமை அரசியல் சட்டத்தின் மூலம் அது பரிபூர்ணமாக உத்தரவாதம் செய்யப்பட்டாலொழிய நாம் ஓய்ந்திருக்கமாட்டோம்."

ஜனசக்தி

வெள்ளிக்கிழமை 19-9-'52

ஒற்றுமையா, சீர்குலைவா?

தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளரின் மகத்தான மாநாடு வெற்றிகரமாக முடிந்தது. தமிழ் நாட்டில் தொழிலாளர் ஒற்றுமையை, குறிப்பாக, தென் பிராந்தியத்திலுள்ள ரயில்வேத் தொழிலாளர்களின் ஒற்றுமையைக் கட்டவும், தொழிலாள-விவசாய-பொது மக்கள் உறவை வளர்க்கவும் உதவும் மக்கள் அணி வகுப்பாக அம் மாநாடு விளங்கியது. பல்லாண்டு பல பெரும் தியாகங்கள் புரிந்து உருவாக்கப்பட்ட தொழிலாளர் ஒற்றுமைச் சிகரத்தின் சின்னமாக விளங்கியது பொன்மலையில் திரண்ட ஜன சமுத்திரம். தொழிலாளர் நலனிலும், அவர்களது நல் வாழ்வுப் போராட்டத்திலும், ஒற்றுமையிலும் அக்கறை கொண்ட அனைவர் மனதும் பூரிப்படைய வேண்டிய அணி வகுப்பு அது.

ஆனால், வளர்ந்தோங்கிவரும் இந்த தொழிலாளர் ஒற்றுமையை திராவிடக் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் இவ்விதக் கண் கொண்டு பார்க்கவில்லை. பொன்மலை மாநாட்டிற்கு இரண்டு நாளைக்கு முன் அவர் துவக்கிய தென் பகுதி ரயில்வேத் தொழிலாளர் சங்கம் தொழிலாளரின் நல்வாழ்வுப் போராட்டத்தை சீர்குலைவு செய்யும் போக்கிலேயே உள்ளது.

சென்ற பொதுத் தேர்தலின்போது காங்கிரஸ் ஐ. என். டி. யு. ஸி., சோஷியலிஸ்டு ஹிந்து மஸ்தூர் சபா ஆகிய தொழிலாள வர்க்கத்தைப் பிளவுபடுத்தி வரும் சீர்குலைவு சக்திகளை எதிர்த்தும் தொழிலாளருக்கு ஒரே சங்கந்தானிருக்க வேண்டுமென்றும் பெரியாரும் "விடுதலை"யும் பேசியும் எழுதியும் வந்ததை நாம் வரவேற்றோம். தொழிலாள வர்க்கம் வரவேற்றது.

இவ்விதம் எழுதியும், பேசியும் இன்னும் ஆறு மாதங்கள் கூட ஆகவில்லை. விடுதலையில் சோஷலிஸ்டுச் சீர்குலைவைப் பற்றி இரண்டு தலையங்கங்கள் தீட்டியதின் மை இன்னும் உலரவில்லை. அதற்குள், ஏற்கனவே உள்ள தொழிலாளர் சங்கத்திற்குப் போட்டியாக மற்றொரு சங்கம் ஏற்படுத்த பெரியார் முன்வந்ததின் காரணமென்ன? சென்ற 6 மாதத்திற்குள் பெரியாரின் போக்கில் இவ்வித மாற்றம் ஏற்பட்டதின் காரணமென்ன?

அன்றிருந்த அதே தொழிற் சங்கங்கள்தானே இன்று மேலும் பலம் பெற்று வளர்ந்தோங்கியுள்ளன? இந்தத் தொழிற் சங்கங்கள் தங்களது கொள்கையை மாற்றிக் கொண்டனவா? தொழிலாள வர்க்கத்தின் பரிபூரண ஜனநாயக அடிப்படையில் இந்த சங்கங்கள் நடப்பதால் இதில் அரசியல் வித்தியாசமின்றி தொழிலாளர் நலனில் அக்கரை கொண்ட அனைவரும் பொன்மலை மாநாட்டின் மேடையில் தோன்றவில்லையா? சகல கட்சியினருக்கும் இதே தொழில் சங்கத்தில் இடங்கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியுமா? பொன்மலை மாநாட்டை நடத்திய விதமே தொழிலாளர் ஜனநாயகத்திற்கும் ஒற்றுமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கவில்லையா? இந்த விதத்தில் இந்த சங்கமும் மற்ற சங்கங்களும் நடத்தப்பட்டு வருகையில், இதற்குப் போட்டியாக மற்றொரு சங்கத்தை அமைப்பதற்குக் காரணமென்ன? 6 மாதத்திற்குள் பெரியாரும் விடுதலையும் கூறியதற்கு முற்றிலும் எதிரான ஒரு போக்கைக் கடைப்பிடிப்பதின் நோக்கமென்ன?

ஆறுமாதத்திற்கு முன் அவர்கள் எழுதியதும் பேசியதும் அவர்களது இன்றையப் போக்கு அப்பட்டமான தொழிலாள வர்க்கச் சீர்குலைவு என்று தீர்ப்புக்கூறும்.

சோற்றுக்காக ரயிலைக் கவிழ்ப்பதா என்று பெரியார் கேட்கிறார். ரயில்கள் கவிழ்ந்ததன் காரணம் கனடாவிலிருந்து இறக்குமதியான லொடலொட்டை இன்ஜின்கள் என்று முன்னாள் ரயில்வே மந்திரி கூறியதையும் மிஞ்சிவிடுகிறார் பெரியார்.

இன்று பஞ்சமும் பட்டினியும் ஏற்பட்டதற்குக் காரணம் தொழிலாளர் வேலை நிறுத்தஞ் செய்வதும், அதனால் உற்பத்தி குறைவதும்தான் என்கிறார் பெரியார். இன்னாட்டின் உற்பத்தி மிக மிக உயர்ந்திருப்பதாக சர்க்கார் அறிக்கைகள் கூறுகின்றன. மக்கள் சபையில் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் அறிவித்தார். இன்று தொழிலாளர் வேலை நிறுத்தத்தால் உற்பத்தி குறைந்ததென்று எந்தத் தொழில் முதலாளியும், சர்க்காரும் கூறத் துணியவில்லை.

சென்ற மூன்று வருடங்களாக கோயம்புத்தூரில் எந்த வேலை நிறுத்தமுமில்லை. நூல் உற்பத்தி முன்னைவிட அதிகரித்திருக்கிறது. என்றாலும் நெசவாளருக்குக் குறைந்தவிலையில் நூல் கொடுக்க மில் முதலாளி முன்வரவில்லை. சர்க்காரும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. உயர்ந்த விலையில் நூலையும் மற்ற சாமான்களையும் விற்க முதலாளிகள் உற்பத்தியைக் குறைக்கச் சதி செய்கின்றனர். வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஆயிரக்கணக்கான கோயம்புத்தூர் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க மறுப்பது மட்டுமல்ல, இன்று வேலை செய்யுந் தொழிலாளர்களையே வேலையிலிருந்து நீக்குவதுதான் இன்று நாம் காணும் காட்சி. இந்தப் பொருளாதார உண்மைக்குத் திரையிட்டு தொழிலாளர்கள் மேல் முதலாளிகள் கூட இன்று சொல்லத் துணியாத புகாரை, குற்றச்சாட்டைப் பெரியார் கொண்டு வருகிறார்.

பஞ்சம். பட்டினி ஏற்பட்டதின் காரணமென்ன? இன்றையவறுமையின் அடிப்படை என்ன? 100க்கு 80 சதவிகித மக்களான விவசாயிகளின் வருமானத்தை ஒரு சில நிலப்பிரபுக்கள் கொள்ளையடிக்கின்றனர். இதனால் 80 சதவிகித மக்களுக்கு பொருள்களை வாங்குஞ் சக்தி இல்லை. இதனால் நம் நாட்டில் புதிய புதிய தொழில் தோன்றுவதற்கும் அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் குறைவதற்கும் இடமில்லாமலிருக்கிறது. மேலும் பிரிட்டிஷ் முதலாளிகளின் கையில் இரும்பு நிலக்கரி, ரப்பர், எண்ணை ஆகிய நம் நாட்டின் முக்கிய தொழில்களிருப்பதால், நம் தேசியத் தொழில்கள் வளராமல் அவர்களது சுயநலத்திற்காகத் தடுத்து வருகின்றனர்.

இவ்விதம் இன்றைய நிலப்பிரபுத்துவ அமைப்பினாலும், பிரிட்டிஷ் மூலதனப் பிடிப்பாலும் நம் தொழில் வளர்ச்சிக் குன்றி வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரித்து வறுமையும் பட்டினியும் பஞ்சமும் அதிகரித்துள்ளன.

இந்த பொருளாதார உண்மையை மறைத்து நல்வாழ்வுக்காகப் போராடும் தொழிலாளர்கள்தான் நாட்டின் வறுமைக்குக் காரணகர்த்தாக்கள் என்கிறார் பெரியார் ஈ. வெ. ரா.

இன்று சகலராலும் ஏற்கப்பட்டு, சட்டபூர்வமாகத் தொழிலாளருக்கு அளிக்கப்பட்டிருக்கும் உரிமையையும் மறுக்கிறார். "சோற்றுக்குக் கணக்குப் பார்த்து வரும்படி" கேட்கிறார்கள் என்று தொழிலாளர்கள் [illegible] வாழ்விற்காக நியாயச் சம்பளம் கோருவதை [illegible] செய்கிறார் பெரியார்.

தொழில் மந்திரி கிரியும், ஐ. என். டி. யு. ஸியும் [illegible] களும் கம்யூனிஸ எதிர்ப்பின்பேரில் [illegible] ஒற்றுமையை பிளவுபடுத்துகின்றனர். ஜாதி, [illegible] என்று தொழிலாளரைப் பிரிப்பதும், [illegible] பகுதி [illegible] மற்றொரு பகுதி தொழிலாளரை [illegible] வெறுக்கச் செய்யும் பிரச்சாரமும், நடவடிக்கைகளும் அதே சீர்குலைவையும் பிளவையுந்தான் ஏற்படு[illegible] முதலாளிக்கும், மக்களால் வெறுக்கப்படும் கா[illegible]ட்சிக்குந்தான் இது [illegible] படும்.

தொழிலா[illegible] விலும் [illegible] எவரும் [illegible] மாட் [illegible]

ஜாதி இந்துக்கள் அடக்கு முறையைத் தடுத்து நிறுத்துக

கொழும்பு, செப். 12—

இராமநாதபுரம் மாவட்டம் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் சார்பில் நடந்த மாபெரும் கண்டனக் கூட்டம் கடந்த 10-9-52 புதன்கிழமை தமிழ் பௌத்தர் கழக மண்டபத்தில் நடைபெற்றது. சம்மேளனத் தலைவர் திரு. வை. அ. சிதம்பரம் அவர்கள் தலைமை வகித்தார்.

"இராமநாதபுரம் மாவட்டத்தில் கல்லலை அடுத்த புரணடிக் கிராமத்தில் 28-6-52ல் நடைபெற்ற சுப்ரமண்யத்தின் பயங்கர படுகொலையைப்பற்றி பல முறையீடுகள் ஆட்சியாளருக்குச் செய்தும் பகிரங்க விசாரணைக்குக் கொண்டுவராமல் தட்டிக் கழிப்பதை இக்கூட்டம் வன்மையாய்க் கண்டிப்பதுடன் புரணடிக் கிராம கோரகொலைக்குப்பின் 'ஜாதி இந்துக்கள், அடக்குமுறை பாணங்களை தாழ்த்தப்பட்ட பாமர மக்கள் மேல் ஏவி துன்பம் விளைவிப்பதைத் தடுக்க உடனடியாக அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறது" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் ஆ. கருப்பய்யா, ஏ. இளஞ்செழியன், க. மு. அறிவாளன், சி. விஸ்வநாதன். ம. ச. ஆறுமுகம், ஆ. சிதம்பரம் ஆகியவர்கள் ராஜாஜியின் ஆட்சியைக் கண்டித்துப் பேசினார்கள்.

காங்கிரஸ்காரரின் காலித்தனமான போக்கு

சிவஞான கிராமணியாரின் சில்லுண்டித்தனம்

கோடம்பாக்கம், செப், 19—

நேற்றுமாலை கோடம்பாக்கம் ஆண்டவர் ஹோட்டல் அருகில் காங்கிரஸ் அபேட்சகரை ஆதரித்து திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் பேசிய கூட்டத்தில், அவரிடம் ஒரு கேள்வித்தாள் துரை என்கிற சுந்தரம் என்னும் அன்பரால் கொடுக்கப்பட்டது.

அதில் "மதிப்பிற்குரிய ம. பொ. சி. கிராமணியார் அவர்களே! தாங்கள் இங்கு முன்னர் வந்து பேசும்பொழுது, '6 லட்சம் மரமேறிகள் 6 நாள் பட்டினி கிடக்கிறார்கள் இந்த அறிவிழந்த அரசாங்கத்தின் கீழ்' என்று அலறிக் கண்ணீர் வடித்தீர்கள். காங்கிரஸ்காரர்கள் சுயநலமிகள், பணமூட்டைகள், பதவி வேட்டைக்காரர்கள் என்று கூறி 'கல்லாலடித்து விரட்டுங்கள்' என்று பன்முறை சாற்றினீர்களே. ஆனால் இன்று நீங்கள், அதே காங்கிரசுக்குப் பாதந் தாங்கியாய் வந்திருக்கிறீர்களே. நீங்கள் கூறிய கல்லெறியும் பணியை நாங்கள் செய்வோம் என்று நீங்கள் அஞ்சவேண்டாம். நாங்கள் உம்மைப்போல் அறிவிழந்திரியவில்லை" என்று குறிப்பிட்டிருந்தது.

அதை வாங்கிக்கொண்ட திரு. கிராமணியார், அதில் உள்ளதைப் படிக்காமல், அதில் தன்னைக் கல்லால் அடிக்கப் போவதாகவும், தன்னைக் கயவாளியென்று எழுதியிருப்பதாகப் பொய் கூறி, தனனை அடிப்ப தென்றால் அடியுங்கள் என்று சொல்லிக்கொண்டே மேடையை விட்டிறங்கி காரில் ஏறிச் சென்றுவிட்டார்.

தனது பேச்சில் திரு. இராமணியார், நகர மக்கள் கூட்டணி அபேட்சகராக நிற்கும் திரு. கே. விநாயகத்தை, "தம்பி விநாயகம் கம்யூனிஸ்ட் கைக்கூலியாகி விட்டானென்றும், தோழர் ஜீவா அசகாய சூர"ரென்றும் மட்டரகமாகப் பேசியுள்ளார்.

அங்குள்ள காங்கிரஸ் பக்த சிகாமணிகள் சிலர் துரை என்ற சுந்தரம் என்ற அன்பரை இழுத்துக் கொண்டு போய் நடுரோட்டில் அடித்ததுமல்லாமல், அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்து கூட்டத்தில் கலாட்டா செய்தார் என்று கேஸ் கொடுத்தார்கள்.

காங்கிரஸ்காரர் தூண்டுதலின் பேரில் அந்த அன்பருக்கு ரூ. 10 அபராதம் விதிக்கப்பட்டு, ஒருமாதம் நன்னடக்கை ஜாமீனும் போடப்பட்டுள்ளது. காங்கிரஸ்காரர்களின முறையற்ற சில்லுண்டிச் செய்கைகளைப் பற்றியே இங்கு எங்கும் பேச்சாயிருக்கிறது.

(ந.—கி.)

கம்யூனிஸ்ட் அபேட்சகரின் அமோக வெற்றி

விழுப்புரம், செப் 17—

விழுப்புரம் நகரசபை தேர்தலில் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் அபேட்சகர் தோழர் வாசுதேவன் 283 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார்.

எதிர்த்து நின்ற ஸ்ரீ தானியேல் (சுயேட்சை) 110 வாக்குகளும், ஸ்ரீ முத்துதாண்டவ படையாட்சி 88 வாக்குகளும் பெற்று தோல்வியுற்றனர்.

வெற்றிபெற்ற கம்யூனிஸ்ட் நகர் மன்ற உறுப்பினர் தோழர் வாசுதேவனுக்கு மக்களால் அமோகமாக மலர்மாலைகள் சூட்டப்பட்டு நகர கட்சி கமிட்டியின காரியதரிசி தோழர் ஆளவந்தார் தலைமையில் ஓர் பிரம்மாண்டமான வெற்றி ஊர்வலம் புறப்பட்டு, வெற்றியை உண்டாக்கிய வார்டில் வந்து சேர்ந்ததும் பொதுக் கூட்டம்நடைபெற்றது. விழுப்புரம் ரயில்வே லேபர் யூனியன் ஆர்கனேசர் தோழர் பத்மநாபன், தோழர் கோவிந்தசாமி, தோழர் வாசுதேவன் முதலியவர்கள் பேசினார்கள்.

(ந.கி.)

ஐ. நா.வில் தெ. ஆ. பற்றி விவாதம்

ஐக்கியநாடுகள், செப். 18—

"பொருளாதார முன்னேற்றம்" என்ற தலைப்பில் ஐ. நா. வில் நடந்த விவாதத்தின் போது தென் ஆப்ரிக்காவில் இனஉறவுகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

இந்தியாவைச் சேர்ந்த திரு. பி. சிவ ராவ் சுயாட்சி பெறுத சில நாடுகளில் உள்ள மோசமான நிலையிலுள்ள இன உறவுகள் பற்றியும், துவேஷம் அங்கு வளர்ந்து வருவது பற்றியும் விளக்கினார்.

இன உறவு பிரச்னை மிகவும் முக்கியமானது எனவும் திரு. ராவ் எடுத்துக் கூறினார். தென் ஆப்ரிக்காவில் உள்ள இந்தியர்கள் தங்களுக்கென எவ்விதமான பிரத்யேக சலுகைகளும் கேட்கவில்லையென்றும், வெள்ளையர்களுக்கு தனிப்பட்ட உரிமைகளும், சலுகைகளும் அளிக்கப்படுவதையும் அவர்கள் சகிக்கமாட்டார்களென்றும் திரு. ராவ் கூறினார்.

இன அடிப்படையில் பாகுபாடு செய்யப்படுவது ஒழிக்கப்பட வேண்டுமென ஐ. நா. சாஸனத்தின் 3வது சட்டம் கூறுகிறது: 73வது சட்டத்தின்படி மக்களின் எல்லா அரசியல் அபிலாஷைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். சுயாட்சி என்றால் சுயாட்சி அற்ற பிரதேசத்திலுள்ள எல்லா மனிதர்களுக்கும் சம உரிமை உண்டென்று தானே பொருள் என்று திரு. ராவ் கேட்டார்.

ஈட்டிமுனை

குருணி பதக்காகுமா?

ஆளும் கூட்டம் அஞ்சி நடுங்கும் செய்திகள் வந்து குவிய ஆரம்பித்து விட்டன. கொட்டை எழுத்துக்களில் காங்கிரஸ் ஜெயித்தது என்று தலைப்பிட்டது தினமணி. ஆனால் கொட்டிக் கொட்டி அளந்தாலும் குருணி பதக்காகுமா? கருப்பை வெள்ளையாக்கி விட முடியுமா? நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ் மண்கவ்வி வருவதை மறைக்க முடியுமா? தோல்வி ஒன்று அல்லது இரண்டா? பல இடங்களில் படுதோல்வி!

சென்ற பதினைந்து வருஷங்களாக சென்னை ராஜ்யத்திலுள்ள அனேகமாக எல்லா நகர சபைகளையும் கட்டி ஆண்டவர்கள் காங்கிரஸ்காரர்கள். நகரங்கள் இன்று பாழடைந்ததற்கு பொறுப்பு அவர்களே! ஏழை, நடுத்தரமக்கள் வாழுமிடங்கள் சாக்கடைகளாக இருப்பதற்குக் காரணம் அவர்களே. ஐஸ்வரியக்காரர்கள் வசிக்க சௌகரியங்கள் செய்து கொடுத்தது தான் அவர்களது சாதனை.

அதனாலேநகரசபைகளுக்குள் புகுந்துகொண்டிருக்கும் இந்த பழம் பெருச்சாளிகளை துரத்தி அடிக்க முன்வந்தனர். மக்கள் ஜனநாயக வாதிகள் ஒன்றுபட்டு காங்கிரசை முறியடிக்க முனவந்தனர். நகரசபைகளிலிருந்து இன்று காங்கிரஸ்காரர்கள் விரட்டப்படுவதின் காரணம் இதுதான். மக்கள் வெறுப்புக்காளாகியவர்களை துரத்தியடிக்கின்றனர் மக்கள்.

இந்த உண்மை, கோயங்காவின தினமணிக்கு வேப்பங்காயாக இருக்கிறது.

காங்கிரஸின கோட்டை என்பார்கள் புதுக்கோட்டையை. இந்த கோட்டையும் இன்று தகர்ந்து தவிடுபொடியாகி விட்டது. புதுக்கோட்டை நகரசபைத் தலைவர் சிவசாமிச் சேர்வை மூன்று இடங்களில் போட்டியிட்டார். ஏதாவது ஒன்று கிடைக்காதா என்று ஏங்கினார். மூன்றிலும் அவருக்குப் பட்டை நாமம் போட்டு விட்டார்கள், புதுக்கோட்டை வாசிகள். அது மட்டுமா? காங்கிரஸ் தலைவரையும் தோற்கடித்தார்கள். 28 ஸ்தானங்களில் 10ஐத்தான காங்கிரஸ் பிடிக்க முடிந்தது! புதுக்கோட்டையும் அருப்புக் கோட்டையாக்கிய புதுக்கோட்டை வாசிகளே சபாஷ்! சபாஷ்!

இன்றைய ஆட்சியாளர்கள் மேல் உங்களுககு எவ்வளவு நம்பிக்கை இருக்கிறது என்பதையும் தெரிவித்துவிட்டீர்கள்! ஆனால் அவர்கள் இதைப் புரிந்துகொள்வார்களா? அதுதான் இல்லை. கீழே விழுந்தது உண்மைதான். ஆனால் மீசையிலே மண் ஒட்டவில்லையே என்பார்கள்.

புதுக்கோட்டைக்கு இளைத்தவர்கள் நாங்களல்ல என்று அறைகூவுகின்றனர் திருநெல்வேலி, திருவண்ணாமலை, காஞ்சிவரம், குடியாத்தம், ராஜபாளையம், திண்டுக்கல் வாசிகள். எல்லா ஊர்களிலும் பழம்பெருச்சாளிகளை விரட்டியடிப்பதில் போட்டா போட்டி கடும் போட்டி என்றுதான் கூறுவேன ஒரு வீட்டிலிருந்து விரட்டிய பெருச்சாளி இன்னொரு வீட்டிற்குள் நுழைந்தால் அந்த வீட்டுக்காரர்கள சும்மா இருப்பார்களா? அதனால்தான் பழம் பெருச்சாளிகளை விரட்டுவதில் ஒவ்வொரு ஊர்ஜனங்களிடையே இவ்வளவு கடுமையான போட்டி!

மூன்று தொகுதிகளில் புதுக்கோட்டையில் நகரசபை காங்கிரஸ் தலைவர் தோற்றார். ஆனால் போட்டியிட்ட இரண்டு தொகுதிகளிலும், திண்டுக்கல்லில் கூட்டணி அபேட்சகர் பாலசுப்ரமண்யம்ஜெயித்தார். மைனாரிட்டிக் கட்சி மந்திரி சபையே! மக்கள் வேண்டாமென்று வெறுக்கப்பட்ட ஆளுங் கூட்டமே! காற்று எந்தப் பக்கம் அடிக்கிறது என்பதைப் புரிந்து கொண்டீர்களா! உங்களாட்சியில் மக்கள் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்தீர்களா? உங்கள் நிர்வாகத்தை மக்கள் ஒழித்துக் கட்டப் போகிறார்கள் என்பதை தெரிந்தீர்களா?

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன் பூர்பான வம்ஸ அரசர்கள் பிரான்சை ஆண்டார்கள்! ஊழலுக்கும் லஞ்சத்திற்கும் கொடுங்கோலுக்கும்உறைவிடமாக விளங்கியது அந்த ஆட்சி அதனால் மக்கள் வெறுத்தனர். பூர்பான் வம்சத்தின அஸ்திவாரமே மக்கள் வெறுப்பென்ற பூகம்பத்தால் ஆடிக் கொண்டிருந்தது. இந்த உண்மை அறிந்திருந்த பூர்பான் அரசன் உணரவில்லை. அவனது கேலிக் கூத்தையும், கொடுங் கோலாட்சியையும் தொடர்ந்து நடத்தினான். மக்கள் அவனைப்பற்றி என்ன கூறினார்கள் தெரியுமா? "அவர்கள் புதிதாகக் கற்றுக் கொள்வதுமில்லை; தவறாகக் கற்றதை மறப்பதுமில்லை" என்றார்கள். காங்கிரஸ்காரர்களும் இந்த பூர்பான் அரசர்களுக்கு இளைத்தவர்களா.

—கே. எம்.

"காங்கிரஸ்—லீக் ஒப்பந்தம் ஏற்பட்டது உண்மை"

முஸ்லீம் லீக் தலைவர் மூக்கை உரிக்கிறார்

சென்னை, செப். 18—

முஸ்லீம் லீக் தலைவர் திரு. மஹமத் இஸ்மாயில் இன்று பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

"முனிசிபல் தேர்தல்கள் சம்பந்தமாக காங்கிரசுக்கும்—லீகுக்கும்ஒருஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்பதை நான் ருசுப்பிக்கமுடியும். இப்படி ஒரு ஒப்பந்தம் ஏற்படவில்லையென்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் டாக்டர்சுப்பராயன் மறுப்பது எனக்குப் பேராச்சரியமாயிருக்கிறது. இதை ஏன் அவர் மறுக்கிறார் என்பது எனக்கு விளங்கவில்லை. ஆனால் இந்த சமயத்தில் அவருடன் சர்ச்சையில் இறங்க நான் விரும்பவில்லை, எனினும், நான் வெளியிட்ட முதல் அறிக்கையில் கண்டுள்ளபடி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது உண்மை யென்பதையும், அவர் இந்தூருக்குப் புறப்படுவதற்கு பல நாட்களுக்கு முன்பிருந்தே இது அமுலுக்கு வந்ததென்பதையும் என்னால் நிரூபிக்க முடியும்.

"அவர் இந்தூருக்குப் புறப்படுவதற்கு முன சில இடங்களில் அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த ஒப்பந்தத்தை ஒத்துக்கொள்ளாதது பற்றி நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தினோம். ஆனால் இப்பொழுது டாக்டர் சுப்பராயன என்னதான் கூற முற்பட்டாலும், ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது என்பதும், அது அமுலாக்கப்பட்டது என்பதும், பல இடங்களில் அவரது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு ஒப்பந்த ஷரத்தை அமுல் நடத்த அவர் தாக்கீது அனுப்பியதும் உண்மையாகும்.

"இன்று இந்த ஒப்பந்தத்தை டாக்டர் சுப்பராயன மறுப்பதால், தேர்தல் நடந்து வரும் இந்த கால கட்டத்தில் பல சங்கடங்களை உண்டாக்கியுள்ளது. எனினும், எனது ஒரே நோக்கம் டாக்டர் சுப்பராயன் கட்சியை பலப்படுத்தி, நாட்டின நலனுக்குகந்த ஒரு பலம் பொருந்திய நிலையான சர்க்காரை ஸ்திரப்படுத்துவதேயாகும். அந்த நோக்கமும் முக்கியத்துவமும் இன்னும் தேவைப படுவதாதலால், முஸ்லீம் லீக் அபேட்சகர்கள் நிறுத்தப்பட்டிருக்கும் தொகுதிகளில்முஸ்லீம்களையும், மற்ற தொகுதிகளில் காங்கிரசை ஆதரிக்கும்படி[illegible] மீண்டும் முஸ்லீம்களை கேட்டுக் கொள்கிறேன்".

தண்ணீர் விநியோகத்தை விரிவாக்க முடிவு

வேலூர், செப். 18—

வேலூர் நகரத்திற்கு தண்ணீர் சப்ளை திட்டத்தைச் சீர்திருத்துவது பற்றி ராஜ்ய சுகாதார எஞ்சினீயர் தந்துள்ள ஆலோசனைகளை, வேலூர் நகரசபை கவுன்சில் அமுல் நடத்துவதென முடிவு செய்திருக்கிறது.

தற்போது, தினசரி 8 லட்சம்காலன் தண்ணீர் பாலாற்றிலுள்ள பிரதான நீர்த்தேக்கத்திலிருந்து நகருக்கு அனுப்பப்பட்டு வருகிறது. ஆனால் நீர் மட்டம் பாலாற்றைவிட 17 அடி குறைந்துவிட்டது. இதனால் நகருக்கு தண்ணீர் சப்ளை பாதிக்கப்பட்டிருக்கிறது.

பிரதான நீர்த்தேக்கத்தில் மேலும் அதிகமாக யந்திர சாதனங்கள் அமைக்கவேண்டுமென சுகாதார எஞ்சினியர் ஆலோசனை கூறினார். மேலும் நகரத்தின் தண்ணீர் வினியோகத்தை விரிவு படுத்துவதற்காக அதிகமாகக் குழாய்களையும் போட வேண்டுமென அவர் கூறினார்.

அமெரிக்காவில் அணுகுண்டு, ஆயுதங்கள் அதிகரிப்பு

சான்பிரான்சிஸ்கோ, செப். 18—

அணுசக்திகமிஷன் தலைவர் டீன் கார்டன், அமெரிக்க வக்கீல்கள் சங்கத்தில் நிகழ்த்திய பிரசங்கத்தில் குறிப்பிட்டதாவது.

"யுத்தம் புரிய இனைக்கும் எதிரி வல்லரசு அழித்தொழிக்கும் அளவுக்குத் தேவையான அணுசக்தி ஆயுதங்களை அமெரிக்கா அமோகமாக செய்து குவிக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை. ஆதலால் சீக்கிரமே அணு சக்தி ஆயுதங்கள் செய்வதை அமெரிக்கா நிறுத்த வேண்டி நேரிடும்" என்றார்.

இன்னும் சில வருடங்களில் அது செய்து முடிக்கப்பட்டு விடும் என்று ஜோசியம் கூறிவிட்டு, ஆனால் அது வரைக்கும் அணு சக்தி பலத்தை அமோகமாகப் பெருக்குப் அளவுக்கு அணு சக்தி விஸ்தரிப்புத் திட்டத்தை மட மடவென்று அமுல் நடத்திக் கொண்டு செல்ல வேண்டுமென்று அவர் அறிவித்தார்.

வப்து கட்சி கலைக்கப்பட்டது

முஸ்தபாவின் மைத்துனர் கைது

பிரிட்டனுடன் புதியபேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும்

கெய்ரோ, செப். 18—

எகிப்தின் மிகப் பெரிய அரசியல் கட்சியான வப்து கட்சியை அதன் தலைவர் முஸ்தபா நஹாஸ் கலைத்துவிட்டார். ஜெனரல் நகீப் சர்க்காரில் புதிய சட்டங்களி னடிப்படையில் சீர்திருத்தப்பட்ட புதிய கட்சி அமைக்கப்படும் என்று நஹாஸ் அறிவித்துள்ளார்.

வப்து கட்சியின் பிரதம தலைவர்களான அப்துல் அஜீஸ், உஸ்மான் [illegible], சொக் எல்தீன் [illegible] முதலியோர் கட்சியிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டனர்.

புதிய சீர்திருத்தப்பட்ட வப்து கட்சியில் சேருவதற்கு கடந்த 24 மணிநேரத்திற்குள் 500 பேர்கள் விண்ணப்பம் செய்துள்ளனர்.

முஸ்தபாவின் மைத்துனர் கைது

வப்துகட்சியின் தலைவர் முஸ்தபா நஹாசின் மைத்[illegible]ன அகம்மது எல் வா[illegible] இன்று ஐரோப்பாவிலிரு[illegible] வந்ததும் கைது[illegible] டார். முஸ்[illegible] இருந்தபோது[illegible] அவருடை[illegible] செல்வாக்கைப் பயன்படு[illegible]திக்கொண்டு, [illegible] டிரியா பஞ்சு [illegible] கொள்ளை [illegible] அவர்மீது [illegible] சுமத்தப்ப[illegible]ட்டுள்ள[illegible]

இத்[illegible] செய்யப் பட்டவ[illegible] 62 ஆகிறது

இதில் 2 மாஜி[illegible] டஜன் அரசிய[illegible]

...திய ராணுவம் விரைந்துள்ளது.

பிரிட்டனுடன் பேச்சுவார்த்தை

பிரிட்டனுக்குப் புதிதாகநிய மிக்கப்பட்டுள்ள எகிப்திய ஸ்தானீகர் பிரிட்டன் வந்து சேர்ந்ததும், ஆங்கிலோ—எகிப்திய தகராறுகளைத் தீர்க்க பேச்சுவார்த்தைகள் நடக்குமென விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

எகிப்திற்குள் கஞ்சா போன்ற போதைப் பொருளான ஹஷீஷை திருட்டுத்தனமாகக் கடத்திச் செல்பவருக்கு மரண தண்டனை விதிக்கும், [illegible]தை உபயோகித்து [illegible] பாதையில் [illegible] க்கு 15 [illegible] ட்டனை [illegible] ட்டத்தை ஜெ[illegible]ல் நகீப் [illegible] றுவார் என [illegible] அறிவிக் [illegible] டுள்ள[illegible]

வீத்-நாம் துருப்புக்களுக்கு மேலும் வெற்றி

[illegible]சைகான், செப் 18—

வீத்-[illegible]ன் நீண்ட கிழக்குக் [illegible] கரையில் உள்ள [illegible] னப் படையின [illegible]த்தின், டுரேனுக் [illegible]ல்உள்ள இரண்டு [illegible]ீத்-நாம் துருப்பு [illegible] கைப்பற்றி [illegible]ரெஞ்சு ராணுவ [illegible] யொன்று கூறு [illegible]

இந்த இடங்கள் டொலில் [illegible] 12, 15 மைல்களிலிருப் [illegible] [illegible] துறைமுகம் [illegible]

ஹைதராபாத் தங்க சுரங்க

தொழிலாளர் சத்தியாகிரகம்

கடும் தண்டனையை ஒழிக்க கிளர்ச்சி

ரெய்ச்சூர், செப். 13—

ஹுட்டியிலுள்ள ஹைதராபாத் தங்க சுரங்கத் தொழிலாளிகள் நிர்வாகம் கண்மூடித்தனமாக தொழிலாளிகளை சஸ்பெண்ட், எச்சரிக்கை சட்ட விரோதமான தண்டனைகளை கொடுப்பதை எதிர்த்தும், இதர கோரிக்கைகளை வழங்க வேண்டுமென்றும் 12-9-52 முதல் சத்தியாகிரகத்தை ஆரம்பித்துள்ளனர்.

11-9-52ல் மத்திய சர்க்கார் தொழிலாளர் இலாகா சமரச அதிகாரி திடீரென்று வந்தார். மறுநாள் தன்னை விருந்தினர் மாளிகையில் சந்திக்கும்படி சங்கத் தலைவர், நிர்வாகஸ்தர்களுக்கு தெரிவித்தார். அந்த நேரத்தில் தலைவர்கள் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆகவே சாயங்காலம் 5 மணிக்கு [illegible]ல் தான் சந்திக்க முடியுமென்[illegible]று கூறினர். சத்தியாகிரகத்தை உடைக்கும் நோக்கத்துடன் சமரச அதிகாரி நான் மாலை 5 மணிக்குள் ஊரை விட்டு போகிறேன். ஆகவே உடனேவந்து சந்திக்க வேண்டுமென்றார். தொழிலாளர்களின் குறைகளை தீர்ப்பதற்காக மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட அதிகாரியாயிருந்த போதிலும் அவர் தொழிலாளி குறைகளை இருந்து கவனியாமல் போய் விட்டார்.

வெள்ளை அதிகாரிகள் சதி செய்து சங்கத்தை உடைக்கவும், சங்கத் தலைவர்களான தோழர்கள் எம். எஸ். கே. தர்மா, பி. நாராமணனையும் கைது செய்வதற்கும் ஏற்பாடு செய்கிறார்கள் என்று தெரிகிறது.

கடந்த [illegible]ன்று நாட்களாக ஏராளமான போலீசாரும், போலீஸ் அதிகாரிகளும் முகாம் செய்துள்ளனர். ரெய்ச்சூர் ஜில்லா கலெக்டர் தன்னுடைய உதவி அதிகாரிகளுடன 13-9-52ல் இங்குவந்தார். சங்கத் தலைவர்களை சந்தித்தார். சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களின் கோரிக்கைகளையும், நிர்வாகத்தின் போக்கையும் கலெக்டரிடம் எடுத்துரைத்தனர்.

ஆனால் கலெக்டர் ஒரு பதிலும் சொல்லவில்லை. கோரிக்கைகள் கிடைக்கும்வரை [illegible] தியாக்கிரஹம் தொட[illegible] நடைபெறும் என்று [illegible] செயலாளர் தோழர் பி. நா[illegible]யணன் அறிவிக்கிறார். தொ[illegible]லாளிகள் அமைதியான[illegible] முறையில் சத்தியாக்கிரக[illegible] செய்துவருகின்றனர்.

ஆப்ரிக்கருக்காதரவாக ஆர்ப்பாட்டம் செய்த கல்லூரிக்கு

மந்திரி எச்சரிக்கை!

[illegible]ான்யம் நிறுத்தப்படுமாம்!

ஜொஹன்ஸ்பர்ச், செப். 18—

கம்யூனிஸ ஒழிப்பு சட்டத்தின்படி விட்வாடர்ஸ்ராண்டு சர்வகலாசாலையைச் சேர்ந்த இரண்டு ஆப்ரிக்க வைத்திய மாணவர்களைக் கைது செய்து விசாரித்ததற்காக வெள்ளை மாணவர்கள் ஆர்ப்பாட்டம் [illegible]ார்களல்லவா? அதற் [illegible]ந்த சர்வகலாசாலைக்கு அரசாங்கம் அளித்து வந்த மானயத்தை நிறுத்திவிட வேண்டிவரும் என ஒரு தென் ஆப்ரிக்க மந்திரி பயமுறுத்தியிருக்கிறார்.

[illegible] வேறு [illegible] கூறி [illegible]து, பேச் [illegible] முயன்ற [illegible] தொடர்ந்[illegible]

[illegible]ஷ் ராயல் விமானம் [illegible]கப்படவில்லை

[illegible]கத்தா, செப். 18—

பிரிட்டிஷ் ராயல் விமானம் ஒன்று [illegible] விமான ஓட்டிகளுடன் [illegible] குடாக்கல் மீது 4 இந்திய விமானங்கள் 24 மணிநேரம் தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லையென்று தெரிகிறது.

[illegible] 19— [illegible]னரை [illegible]மிஷன்" [illegible] பதாக [illegible] தாவித் [illegible]

தூதுகோஷ்டியினருக்கு மங்கோலிய ஸ்தானீக[illegible] விருந்து

மாஸ்கோ, செப். [illegible]

சோவியத் யூனியன், மக்[illegible] சீனா, மங்கோலியா நாடுகளு[illegible]டையே நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள மங்கோலிய தற்காப்பு மந்திரி எஸ். பாடாவும் மாஸ்கோ வந்துள்ளார்.

மங்கோலிய ஸ்தானீகர், தூதுகோஷ்டியினர் அனைவருக்கும் ஒரு விருந்தளித்தார். விருந்தில் தோழர் மொலட்டாவ், மார்ஷல் வரோஷிலாவ, மார்ஷல் வாசிலெவ்ஸ்கி, தோழர் சௌ-என்-லாயும் இதர சீன தூதுகோஷ்டியினரும் கலந்து கொண்டனர்.

நடக்க இருப்பவை

37-வது வட்ட சுயேச்சை அபேட்சகர் டி. டி. அரசுவை ஆதரித்து 20-9-52 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ராயப்பேட்டை அம்மன் கோவில் மைதானத்தில் திரு. எஸ். தாமோதரம் தலைமையில் நடக்கும் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் முகவை இராஜ மாணிக்கம், கவிஞர் கண்ணதாசன், திருமதி அருண்மொழி எம். பச்சையப்பன ஆகியோர் பேசுவார்கள்.

விவசாய சங்கமும், "சமூக அபிவிருத்தித் திட்டங்களும்"

இந்தியா பூராவும் 55 சமூக அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாக்கப்படும். 2 லட்சம் ஜனத்தொகை, 150,000 ஏக்கர் நிலத்தைக் கொண்ட 300 கிராமங்களுக்கு ஒரு சமூக அபிவிருத்தித் திட்டம் வீதம் அமுலாக்கப்படும். இந்த 55 சமூக அபிவிருத்தித் திட்டங்கள் மொத்தம் ஒரு கோடி மக்களையும், 16,500 கிராமங்களையும் பாதிக்கும். [illegible] இந்தத் திட்டம் இந்திய சர்க்காருக்கும் அமெரிக்க சர்க்காருக்கும் இடையே 5-1-52ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி [illegible] காங்கிரஸ் ஆட்சியாளர்களும், முதலாளிகளின் பத்திரிகைகளும் இந்தத் திட்டத்தை [illegible] புகழ்கின்றன.

ஆனால் பாட்னாவில் கூடிய மத்திய கிசான் கவுன்சில் சமூக அபிவிருத்தித் திட்டங்களை [illegible]

[illegible]

சீர்திருத்த உதவாது" என்று அ. இ. கா. க. பொருளாதார, அரசியல் ஆராய்ச்சி இலாகா தீர்ப்பு கூறியுள்ளது. சமூக அபிவிருத்தி திட்டத்தை அம்பலப்படுத்த இதைத் தவிர நமக்கு வேறு சான்று தேவையில்லை. காங்கிரஸ் மந்திரி சபையின் கொள்கையை வகுக்கும் அ. இ. கா. கமிட்டியின் ஒரு ஸ்தாபனமே இவ்வாறு கூறியுள்ளது.

நெருக்கடி தீருமா?

நம்முடைய உணவு, விவசாய நெருக்கடியை இந்த சமூக அபிவிருத்தித் திட்டம் தீர்த்துவைக்குமா என்பது அடுத்த கேள்வி.

"போட்டிருக்கும் திட்டம் வெற்றி பெற்றாலும்கூட, ஐந்து ஆண்டுகள் முடிந்தபின் இந்தியா 30 லட்சம் டன் உணவு தான்யங்களை இறக்குமதி செய்ய வேண்டிவரும். அப்பொழுதும்கூட வயது வந்த ஒருவருக்கு ஒரு நாளுக்கு 14.5 அவுன்ஸ் உணவு தான்யம்தான் கிடைக்கும்" என சமூக அபி[illegible]

திட்டங்கள், ஐந்து ஆண்டுத் திட்டம் ஆகியவைபற்றிய மத்திய கிசான் கவுன்சில் [illegible] சுட்டிக்காட்டுகிறது.

உணவு விஷயில் பெரிய அபிவிருத்தி ஒன்றும் ஏற்பட்டுவிட முடியாது என்பதை இது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இப்பொழுது 30 லிருந்து 40 லட்சம் டன் வரை உணவு தான்யம் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. [illegible] 14.5 அவுன்ஸ் உணவுகூட போஷாக்குக்கு [illegible] தவிர வேறல்ல.

இந்தத் திட்டத்தின் உண்மையான இலட்சியத்தை ஆராய்வோம். பல் வேறு திட்டங்களின் கீழ் [illegible] நாம் அடைய வேண்டிய இலட்சியம் வருமாறு:

பெரும் நீர்ப்பாசனத் திட்டங்கள் 22,72,000 டன் உணவு தானியம்.

சிறு நீர்ப்பாசன திட்டங்கள் 19,32,000 டன்.

நில அபிவிருத்தி திட்டங்கள் 15,44,000 டன்.

[illegible] திட்டங்கள் 5,84,000டன்.

விதை விநியோகத் திட்டங்களும் பிற திட்டங்களும் 5,20,000 டன்.

பெரும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு 450 கோடி ரூபாய் செலவாகும். அதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த செலவில் 30·2%. இதன் மூலம் 20 லட்சம் டன் உணவு தானியங்கள் அதிகப்படியாகக் கிடைக்கும். 'உணவு, விவசாய, கிராம அபிவிருத்தி' என்ற தலைப்பில் உள்ள சிறு நீர்ப்பாசன திட்டங்களுக்கும், பிற திட்டங்களுக்கும் 191·69 கோடி ரூபாய் செலவாகும். அதாவது மொத்த செலவில் 12·8%. [illegible] மொத்த செலவில் 12·8%. ஆகும். 'உணவு, விவசாய கிராம [illegible]' மூலம் 71·5% உணவு உற்பத்தி அதிகமாகும் என்பதைக் கவனிக்கவேண்டும்.

இதன் அர்த்தம் என்ன? [illegible]

உண்மையான லட்சியம்

[illegible]

மூலப் பொருள்களில் நமக்குள்ள லட்சியம் வருமாறு:

சணல் —21லட்சம்பேல்கள்
பருத்தி—12லட்சம்பேல்கள்
எண்ணெய் வித்துகள் | 3·75 லட்சம் டன்
சர்க்கரை — 6·9 லட்சம் டன்

இந்தியப் பொருளாதாரத்தில் அமெரிக்க ஆதிக்கம்

அமெரிக்க சர்க்காருடன் இந்திய சர்க்கார் 8நடைமுறை ஒப்பந்தங்கள் செய்துள்ளது. இந்த ஒப்பந்தங்களின் கீழ் வரும் அபிவிருத்தி திட்டங்கள் அமெரிக்க நிபுணர்களின் மேற்பார்வையில் அமுல் நடத்தப்படுமாம். அந்த அமெரிக்க நிபுணர்களோ அமெரிக்க சர்க்காருக்குத்தான் கட்டுப்பட்டவர்[illegible] இந்த நிபுணர்களுக்கு [illegible]

பி. ஸ்ரீனிவாசராவ்
காரியதரிசி,
தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்

கள் மீது வழக்குத் தொடர முடியாத விதிவிலக்கு உரிமைகளும் அளிக்கப்படும். இந்தியாவிலுள்ள எந்த அதிகாரியோ, இதர ஸ்தாபனமோ அவர்கள் நடவடிக்கைகளில் தலையிட முடியாது; அவர்களது திட்டங்களில் குறுக்கிட முடியாது. அமெரிக்கா தரும் 5 கோடி டாலர் நிதியில் அமெரிக்க சர்க்காருக்கு பிடிக்காத எதற்காகவும் ஒரு காசு கூட செலவழிக்க முடியாது, இதுதான் அமெரிக்க உதவியின் லட்சணம். பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம் கூட இவ்வாறு அமெரிக்க ஆளும் வட்டாரம் கிராமப் புறங்களில் ஊடுருவ முற்பட்டுள்ள மாதிரி செய்யமுடியவில்லை.

கிராமங்கள் அமெரிக்க அதிகாரிகளின் வேட்டைக்காடு

இந்த 55 அபிவிருத்தித் திட்டங்களும், இந்திய சர்க்காரின் கட்டுப்பாட்டிற்குட்படாத வெளிநாட்டு ஆக்கிரமிப்பு ஸ்தலங்கள் தவிர வேறில்லை. ஒவ்வொரு அபிவிருத்தித் திட்டத்தையும் மேற்பார்வையிட ஒரு நிர்வாக அதிகாரியிருப்பார். அவரின் கீழ் 125 பேர் வேலைபார்ப்பார்கள். மொத்தத்தில் 77 அமெரிக்க அதிகாரிகள் மேற்பார்வையாளர்களாக "நிபுணர்கள்" என்ற பட்டம் சூட்டிக் கொண்டு, ஆலோசனை கூறவந்த நிபுணர் என்ற முறையில் நமது தேசியப் பொருளாதாரத்தில் மேலாதிக்கம் வகிப்பர்.

உத்தர் பிரதேசத்தில் உள்ள எட்டாவா அபிவிருத்தித் திட்டத்தை பரிசிலனை செய்த ஹரிஜன் பத்திரிகை பிரதிநிதிகள், இந்த அபிவிருத்தித் திட்டமென்பது மேலிருந்து அதிகாரம் செலுத்துவதும் பொருளாதார அபிவிருத்திக்கு லாயக்கற்றதுமாகும் என்றும், இந்திய கிராமங்களை அமெரிக்க நிபு[illegible]

ணர்கள் சீரழித்துவிடுவார்களென்றும், விவசாய அபிவிருத்திக்கு அவர்கள் எதுவும் செய்ய முடியாதென்றும் முடிவு கட்டியுள்ளனர்.

இந்த நடைமுறை ஒப்பந்தங்கள் மூலம், அமெரிக்க பகாசுர வர்த்தக முதலாளிகள்: அபிருத்தித் திட்டத்திற்குத் தேவையான உரப்பொருள்கள், உருக்கு சாமான்கள் அளிக்கும் உரிமையை தங்கள் அதிகாரத்தில் வைத்துள்ளனர். ஆகவே இந்தப்பொருள்களை உற்பத்தி செய்யவோ, மலிவான விலைக்குக் கிடைக்கும் இதர நாடுகளிடமிருந்து வாங்கவோ இந்தியாவிற்கு உரிமை இடையாது. இந்த ஒப்பந்தங்கள் மூலம் இந்தியாவில் விற்பதற்குரிய பொருள்களை அமெரிக்கா உற்பத்திசெய்து அனுப்பவும், தனக்கு வேண்டிய மூலப் பொருள்களை இங்கிருந்து கொண்டு செல்லவும் அமெரிக்க சர்க்கார் உரிமை பெறுகிறது.

டாக்டர் குமரப்பா கண்டனம்

இந்த ஒப்பந்தத்தை டாக்டர் குமரப்பா மிக வன்மையாக கண்டித்துள்ளது மிகவும் குறிப்பிடத்தக்கது. "இந்திய அமெரிக்க ஒப்பந்தமானது, அமெரிக்க பொருளாதார ஏகாதிபத்திய சகாப்தத்தின் ஆரம்பக் கட்டமாகுமென்றும், பிரிட்டிஷ் அரசியல் ஏகாதிபத்தியம் வெளியேறியதும் நிலவிய நிர்வாக ஊழலைப் பயன்படுத்திக் கொண்டு அந்த இடத்தில் நுழைந்துகொள்ள செய்யப்படும் முயற்சியென்றும்" தான் பயப்படுவதாக டாக்டர் குமரப்பா கூறியுள்ளார்.

(இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆக 30).

யுத்தத் தயாரிப்புக் களம்

அமெரிக்க யுத்த யந்திரத்தின் அங்கங்களாகவுள்ள சேவகர்களின் துணை கொண்டு கிராமப்புறங்களில் அமெரிக்க ஆதிக்கக்காரர்கள் தங்கள் வஞ்சக வலையை விரித்து வருகின்றனர். கெடுபிடி யுத்தகாலத்தில், இந்த சமூக அபிவிருத்தித் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைவரும், கிராமப்புறங்களில் யுத்தப் பிரசாரகர்களாகவும் பணியாற்றுவார்கள். யுத்தம் ஏற்படுமானால், இவர்கள் கிராமங்களிலுள்ள மக்களை பட்டாளத்திற்கு சேர்ப்பதற்குத் தூண்டவும், யுத்தத்திற்குரிய மூலப் பொருள்களை சேகரிக்கவும் ஈடுபடுவார்கள். இதனால்தான், "இந்த ஒப்பந்தம், கொரியாவிலிருந்து மேற்கு ஜெர்மனி வரை வளைத்து ருஷ்யாவை சுற்றி வளைக்க அமெரிக்கா வீசியுள்ள கயிறு" என்று டாக்டர் குமரப்பா இதை சரியாக கண்டித்துள்ளார்.

ஆகவே, சமூக அபிவிருத்தித்திட்டங்களின் நடைமுறை ஒப்பந்தங்களின் சொரூபத்தைப் பார்த்தாலே, இந்தியா அமெரிக்காவுக்கு முழுக்க முழுக்கக் கட்டுப்பட்டு, அமெரிக்க ஏகாதிபத்திய யுத்தத் தேர்க் காலில் இந்தியா கட்டப்பட்டு இருப்பதை நன்கு புரிந்து கொள்ளலாம்.

விவசாய இயக்க முக்கியத்துவம்

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் இந்த சாணக்கிய தந்திரத்தை முறியடிக்க வேண்டுமானால், ஒரு பலம் வாய்ந்த சமாதான இயக்கத்தைக் கட்டி, ஏகாதிபத்திய, நிலப் பிரபுத்துவ எதிர்ப்புக் கிளர்ச்சியை வலுவடையச் செய்ய வேண்டும். கோடிக் கணக்கான விவசாய மக்களை, அமெரிக்க ஏகாதிபத்திய மாய்மாலங்களைப் புரிந்து கொள்ள வைத்து, நிலப் பிரபுத்வ நுகத்தடியிலிருந்து தாங்கள் விடுவிக்கவும் அவர்களை கிளர்ந்தெழும்படி செய்ய வேண்டியது விவசாய இயக்கத்தின் பிரதம கடமையாகும்.

சுகாதாரமும், சுபீட்சமும் நிறைந்த திருச்சி நகரை அமைக்க

மக்கள் கூட்டணிக்கு ஓட்டுப் போடுவீர்!

தோழர் பழனியாண்டி (எம்.எல்.ஏ.) அறிக்கை

மக்கள் முன்னணி அபேட்சகர்கள்

திருச்சி நகரசபைத் தேர்தலுக்கு மக்கள் முன்னணி கமிட்டியின் சார்பாக கீழ்க்கண்ட அபேட்சகர்களை நிறுத்தப்பட்டிருக்கிறது என்று மக்கள் முன்னணி கமிட்டி காரியதரிசி டி. பி. ரெத்தினம் அறிவிக்கிறார்:—

1வது வார்டு-ஆர். லெக்ஷமணன், 2வது வார்டு—வையாபுரி, 5வது வார்டு - அப்துல் கபார், 7வது வார்டு-சி. எஸ். ஞானம், 8வது வார்டு—டாக்டர் கணேசன், 9வது வார்டு-ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி, 10-வது வார்டு—கே. பி. மாணிக்கம், 11வது வார்டு-டி. எஸ். தக்ஷிணமூர்த்தி, 14வது வார்டு—முத்தையா, 20வது வார்டு - வேதவல்லி, 21வது வார்டு - வாவுத்தீன், 22வது ஜமால் மொய்தீன் பி. ஏ. பி. எல்., 23வது வார்டு-ஆர்.ஏழுமலை, 25வது வார்டு - ஆர். இப்ராகிம், 26வது வார்டு – பி. சுப்பிரமணியன், 29வது வார்டு—லூர்துசாமி, 30வது வார்டு—ஜோசப் கோல்டு, 32வது வார்டு - அற்புதம் பிள்ளை, 33வது வார்டு-இருபாபுரி.

திருச்சிநகர வாக்காளர்களே! பொதுத் தேர்தல்கள் முடிந்து எட்டு மாதங்களுக்குப்பின் இன்னொரு பெரிய தேர்தல் சோதனை ஏற்பட்டுள்ளது. இச்சோதனையிலும் நீங்கள் உங்கள் கடமைகளை செவ்வனே செய்து ஜனநாயக முற்போக்கு சக்திகள் வளர நல்லதோர் வாய்ப்பம் அளிக்க வேண்டும் என்று இந்த மக்கள் முன்னணி கட்சி சார்பற்ற இயக்கமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நகர மக்கள் நன்கு வாழ நல்ல முறையிலே தண்ணீர் வசதி, சுகாதார வசதி, ரோடு வசதி, பொழுது போக்கு வசதி, வீடற்றவர்களுக்கு வீட்டு வசதி போன்ற வசதிகளை செய்து நகரத்தை அமையச் செய்ய வேண்டியது நகர சபையின் கடமை. ஆனால், பல ஆண்டுகள் சென்றும் இன்னும் நமது திருச்சி நகரம் ஒரு சிறிதும் முன்னேற்றமடையவில்லை. நகர மக்களுக்கும் சிறு வியாபாரிகளுக்கும் வரி வசூலிப்பது அதிகமானது தவிர வசதிகள் வளர்ச்சியுறவில்லை. மக்களிடம் வரி வசூலித்தால் தான் வசதிகள் செய்துதரமுடியும் என்பது தவறான போக்கு. காமதேனுவைப் போன்று வருமானத்தை அள்ளிக் கொழுக்கும் நகர பஸ் சர்வீஸ்களை நகரசபை ஏற்கலாம், பொழுதுபோக்கு நிலையங்களை நகரசபை நடத்தலாம். காண்ட்ராக்ட் முறையை ஒழித்து முனிசிபாலிட்டியே நடத்தவேண்டும். சிற்றுண்டிச் சாலைகளை நகரசபை ஏற்படுத்தலாம். இதன் மூலம் வருமானத்தால் நகரத்தின் தேவையை எளிய முறையில் பூர்த்தி செய்யமுடியும். நகர மக்களால் மடியில்கைவைத்து பல வழிகளில் வரிகளை வசூலிப்பதும் ராஜ்ய சர்க்காரிடம் பங்குபெற வேண்டும், மத்ய அரசாங்கத்திடமிருந்து வரியில் பங்குபெற வேண்டும். இன்னும் இது விஷயத்தில் சென்னை ராஜ்ஜிய அரசாங்கம் முயற்சிக்கின்றதோ இதேபோல் நகரசபையும், ராஜ்ய அரசாங்கத்திடமிருந்து பங்குபெற போராட வேண்டும். இத்தகைய முற்போக்கு காரியங்கள் செய்ய யாரால் முடியும்? எச்சமயத்தில் முடியும் என்பதை சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஏழைகளின் உள்ளத்தை பிழிந்து வசூலிக்கும் வரிப் பணத்தைக்கொண்டே எல்லா செலவுகளையும் செய்யவேண்டும் என்னும் எண்ணத்துடனிருக்கும் கவுன்சிலர்களால் இது செய்யமுடியுமா? நகர சபைக்குச் சொந்தமான நிலங்களை குறைந்த விலைக்கும் தங்களுக்கே சொந்தமான நிலங்களாக்கிக்கொள்ளும் கௌன்சிலர்களால் இந்த காரியங்கள் செய்ய முடியுமா? தன் வீட்டிற்கு, தன் தெருவிற்கு தன் சுற்றத்தார்க்கு மட்டும் வசதி செய்து கொண்டால்போதும் என்று எண்ணும் சுயநல கௌன்சிலர்களால்தான் இச்செய்[illegible]செய்யமுடியுமா? முடியாது என்பதுதான் நாம் நடைமுறையில் கண்டறிந்த உண்மை. மக்[illegible]ளுக்காக அல்லும் பகலு[illegible] உழைப்பவர்களை மக்கள் [illegible] நன்கு வாழ வேண்டுமென[illegible] முற்போக்கு எண்ணமுடை[illegible]வர்களைத் தேர்ந்தெடுக்[illegible]வேண்டுமென்பதற்காகத்[illegible] மக்கள் முன்னணியின் சா[illegible]ல் பொறுக்கியெடுத்த[illegible] அபே[illegible]சகர்களை நிறுத்தியு[illegible]

மக்களின் [illegible] குறைத்து, [illegible] நிதி திரட்டி[illegible] றவர்களு[illegible] எல்லோரு[illegible] தண்ணீர்[illegible] மை[illegible] தடுக்[illegible] சுகா[illegible] வசதியும், [illegible]பொழுது போக்கு வசதியும் [illegible] செய்து நமது திருச்சி ம[illegible]கரை ஒரு அழகு நகராக்க [illegible]ல்லோரும் மக்கள் முன்னணி [illegible]பேட்சகர் களுக்கு ஓட் [illegible]மாறு தாழ்மையுடன் [illegible] கொள்ளுகிறேன் [illegible] எம். பழனியா[illegible] மக்கள் [illegible]

நகர சபைத் தேர்தலுக்கு வேலூர் ஐக்ய முன்னணித் திட்டம்

வேலூர், செப். 17—

நகர சபைத் தேர்தலுக்கு வேலூர் ஐக்கிய ஜனநாய முனணி கீழ்க்கண்ட அம்சங்களை கொண்ட திட்டத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

1. வீட்டு வரியையும், இதர வரிகளையும் குறைக்க வேண்டும்.

2. புதிய ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தவேண்டும். கால்வாய்கள் கட்டப்படாத தெருக்களில் உடனடியாகக் கட்டப்பட வேண்டும்.

3. மழை; வெள்ளத்தால் சேதமாகும் ரோடுகளுக்கு சிமெண்ட் அல்லது தார் போடவேண்டும்.

4. ஏழைமக்கள் வசிக்கும் பிரதேசங்களில் போதிய விளக்குகள் போடவேண்டும்.

5. பாலாற்றில் இன்னும் 2 கிணறுகள் அதிகமாய் வெட்டி, தண்ணீர் பஞ்சம் [illegible] முயலவேண்டும்.

6. மார்க்கெட்டை நவீன முறையில் மாற்றிக் கட்ட வேண்டும்.

டர்பனை வெள்ளையர் மயமாக்க

இந்தியர் ஸ்தாபனங்களின் எதிர்ப்பு!

டர்பன், செப். 18—

டர்பனையும் அதன் சுற்றுப்புற பிரதேசங்களை இன அடிப்படையில் பிரிப்பது பற்றிய ஒரு திட்டத்தை தேசியக் கட்சி (டாக்டர் மலானின் கட்சி) நில உறவு முறை பரிசிலனை போர்டுக்கு சமர்ப்பித்திருக்கிறது. மேற்படி திட்டத்தைகடுமையாக எதிர்த்து நேடால் இந்தியர் காங்கிரசும் நேடால் இந்திய ஸ்தாபனமும் ஒன்று சேர்ந்திருக்கின்றன.

தென் ஆப்பிரிக்காவின் இன ஒதுக்கல் சட்டத்தின் ஒரு பகுதியாக டி நில உறவு முறை பரிசிலனை போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. பல் வேறு இடங்களில் இந்தியர் ஆபிரிக்கர் போன்ற இன மக்களைக் குடி[illegible] திட்டம் வகுப்பது, "அனைவரையும் கட்டுப்படுத்தும் இறுதியான" திட்டம் ஒன்றை வகுப்பது ஆகிய வேலைகளுக்கு இந்த போர்டுக்கு அதிகாரமளிக்கப் பட்டிருக்கிறது.

தேசியக் கட்சியின் திட்டம் டர்பன் நகரம் முழுவதையுமே வெள்ளையர் பிரதேசமாக்[illegible]கிறது. டர்பனுக்கு வடக்[illegible] இந்தியரும், தெற்கே ஆ[illegible] கரும் வசிக்கவேண்[illegible]ம் ஆ[illegible] கரும், இந்தியரும் பரிபூரணமாக டர்பான் [illegible] வியாபாரஸ்தலத்திற்கு [illegible]வெளியே இருக்கும்படி செ[illegible]

"இன ஒதுக்க[illegible]டம் வெள்ளையரல்லாதாரின் பொருளாதாரத்தின் கழுத்தை [illegible]நெறித்துவிடும் என[illegible] எ[illegible]ந்[illegible]தெளிவாக உணர்ந்தே வெள்ளையரல்லாதார் அதற்கெதிராகக் [illegible] கிளம்பியுள்ளனர்" என நேடால் இந்தியர் காங்கிரஸ் அறிவித்துள்ளது. அதன[illegible] அறிக்கை, மேலும் கூறு[illegible]வதாவது:—"தேசியத் திட்டம் [illegible]னும் மோசமானது. [illegible]க்கு எங்[illegible]து. வெள்[illegible] கள்

[illegible]பைக் காங்கிரஸ் வெளிப்படுத்துகிறது"

தேசியத் திட்டம் "முட்டாள் தனத்தின் உச்சமாகும்" என நேட்டால் இந்திய ஸ்தாபனமொன்று அறிவித்துள்ளது. எந்தவிதமான திட்டம் டர்பான் முழுவதையும் வெள்ளையர் மயமானதாக மாற்றிவிட முடியாது. தென் ஆப்ரிக்க வெள்ளையர் அதிககாலத்திற்குக் கண்களை மூடிக் கொண்டு இருந்துவிட மாட்டார்கள், வெள்ளையல்லாதார் பிரச்னைக்கு வெள்ளையரே ஒரு முடிவு காணலாம். இதை வெள்ளையரல்லாதாரின் ஒத்துழைப்புடன் தான் சாதிக்க முடியும் என டி ஸ்தாபனம் கூறியுள்ளது.

பூனா பாதுகாப்புசிப்பந்திகள் வேலை நிறுத்தம்

நகரத்தின் 35 தொழிற் சங்கங்களின் ஆதரவு

பூனா, செப்[illegible]

பூனா வி[illegible] வேலைநி[illegible] செய்யும் [illegible] பாதுகாப்[illegible] ஸ்தாப[illegible]களின் [illegible] [illegible]று நக[illegible] [illegible]ள நடத்தினர். [illegible] [illegible] கண ஓம் [illegible]ம், [illegible] [illegible] கொண்டும் முக்[illegible] [illegible]க்களின் [illegible]

[illegible]புசிப்பந்திகள் [illegible]த்தம் ஆக. 29ல் [illegible]தது. 35,57[illegible] [illegible]ரிகள் வேலை[illegible] [illegible]டுபட்டுள்ள[illegible] [illegible]ததில் [illegible] இத[illegible]டையில் ச[illegible] [illegible]ஷ-ரன்[illegible] [illegible]கரி[illegible] [illegible]

யுத்த கேந்திர பிரச்சினைகள்பற்றி அமெரிக்க மந்திராலோசனை

வாஷிங்டன், செப். 18—

அ[illegible]த புதனன்று லண்டனில் [illegible]ரம்ப[illegible]கப்போகும் [illegible] அமெரிக்க உதவி [illegible] வெள[illegible] [illegible]ந்திரி டேவிட் புரூஸ் [illegible] கேந்திர [illegible] [illegible]ளபற்றி விவா[illegible] [illegible]ரோப்பிய நாடு [illegible] அமெரிக்க ஸ்தா[illegible] [illegible]ஸ் கோவி[illegible] [illegible]க ஸ்தானிகர் [illegible] ஆகியோர் [illegible]ர்கள்.

[illegible] உறவுகள் [illegible], அமெரிக்காவின் [illegible]ள், தங்கள் [illegible] [illegible]திற்கு பங் [illegible] [illegible]பாதுகா[illegible] [illegible] [illegible]க்க [illegible]படும் [illegible] அதிகார [illegible]ன.

கோவில்பட்டி மக்கள் படும் அவதி

எட்டயபுரம், செப். 18—

இந்த வாரம் கோவில்பட்டி தாலுகாவில் கிராமங்களில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு நெல்லோ சோளமோ ஒன்றுமே சப்ளை செய்யப்படவில்லை. கிராமங்களில் உள்ள எல்லா வியாபாரிகளும் கோவில்பட்டி சப்ளை அதிகாரியைக் கண்டு கேட்டதில் கையில் சரக்கு ஸ்டாக் இல்லை என்று சொல்லி விட்டாராம். எட்டயபுரத்தின் கூட்டுறவுப் பண்டக சாலையைச் சேர்ந்த டவுன் கடைகளுக்கு மட்டும் கடை 1க்கு 10 மூடை நெல் மட்டும் சப்ளை செய்யப் பட்டிருக்கின்றது. கடை 1க்கு 2 அவுன்ஸ் வீதம் சப்ளை செய்வதற்கு மூடை 30, 35 ஆவது தேவையிருக்கும். அப்படியிருக்க 10 மூடையை வைத்து என்ன முறையில் சப்ளை செய்வது என்று கூட்டுறவு சங்க நிர்வாகிகள் சங்கடப்படுகின்றனர். எட்டயபுரம் கூட்டுறவு ஸ்டோரின் மூலமாக சுற்றுப்புறக் கிராமங்களான இளமனத்தம்பிதப்பரம், சுரைக்காப்பட்டி, அம்மாமடம் செமப்புதூர், குளத்துப்பட்டி, புதூர் முதலிய கிராமங்களுக்கும் சப்ளை செய்யப்பட்டு வந்தது. இந்த வாரத்தில் அந்த கிராமங்களுக்கும் நெல்லோ, சோளமோ ஒன்றுமே சப்ளை செய்யப்படவில்லை. கிராம வாசிகள் எட்டயபுரம் வந்து வெறும் கடைகளை மட்டும் பார்த்துவிட்டு ஏக்கமுடன் திரும்புகின்றனர். கிராமவாசிகளுக்கு மைலோகூட சப்ளை செய்யாதகாங்கிரஸ்சர்க்காரும் ஒரு சர்க்காரா என்று நமது நிருபரிடம் எரிச்சலுடன் சொல்லுகின்றனர். உணவு மந்திரியோ மைலோ ஏராளமாக ஸ்டாக் இருக்கின்றது என்று சொல்லுகிறார். ஆனால் சப்ளை ஆபீஸர் ஸ்டாக் இல்லை என்று சொல்லுகிறார். மைலோ வெளி மார்க்கட்டில் ரூ. 1க்கு $1\frac{3}{4}$ படியும் அரிசி ரூ. 1க்கு முக்காலபடி, முக்கால் அரைக்கால் படியாகவும் விற்பனையாகிறது. இந்த வாரம் நியாய விலைக் கடைகளில் சப்ளை இல்லாததால் இன்று வெளியில் விலை கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நமது நிருபரிடம் சொன்னது

ஓர் கிராமவாசி நமது நிருபரிடம் சொன்னதாவது:

கண்ட்ரோல் எடுத்ததற்கு பின்னால் விலைவாசி மிகவும் ஏறிவிட்டது. ரேஷன் இருக்கும் பொழுது வெளியில் அரிசி ரூ. 1க்கு $1\frac{1}{4}$, 1-1/3 படியாக வாங்கிச் சாப்பிட்டோம். சோளம், கம்பு, கேப்பை ரூ. 1க்கு 3 படிவரை தாராளமாக வாங்கிச் சாப்பிட்டோம். ரேஷன் எடுத்ததற்குப் பின்னால் அரிசி ரூ. 1க்கு 3/4 படி, முக்கால் அரைக்கால் படியாகவும் சோளம் ரூ. 1க்கு 1-3/4 ஆகவும் உயர்ந்துவிட்டது. ஆகையால் என் போன்ற கிராமவாசிகளுக்கு பழையபடியும் ரேஷன் எப்பொழுது வரும்என்று ஏக்கத்துடன இருக்கிறோம். ஆச்சாரியார் சர்க்கார் கட்டாய ரேஷனை பழையபடியும் அமுலுக்கு கொண்டுவருமா" என்றார். (ந-கி.)

பர்மாவுக்குக் கப்பல் தபால்

சென்னை, செப். 17—

எஸ். எஸ். எம்ப்வாரா என்ற கப்பல், சென்னையிலிருந்து பர்மாவுக்கு, 1952 செப்டம்பர் 21-ந் தேதியன்று புறப்படுகிறது. 1952 செப்டம்பர் 20-ந் தேதி காலை 10 மணிக்கு முன்னால் நகரக் கிளைத்தபால் ஆபீசுகளிலும், மாலை 3 மணிக்கு முன்னால் சென்னை, ஜி. பி. ஓ. விலும் போடப்படும் தபால்கள் இந்தக் கப்பலில் சேரும்.

நெல் மிஷின், தோல் ஷாப் தொழிலாளிகள் குறைந்தபட்ச கூலி நிர்ணயம்

திருவனந்தபுரம்,செப்.18—

நெல் அரைப்பு மில், மாவு மில், பருப்பு மில்களில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச சம்பளம் பற்றி திரு-கொச்சி சர்க்கார் தனனுடைய உத்தேச யோசனைகளை இன்று வெளியிட்டுள்ளது. (திறமையுள்ள) எஞ்சின் டிரை[illegible] தினசரி ரூ. 2-ம், [illegible]தாழிலாளிகள் வேக[illegible] வை[illegible] அரைப்பு பகுதியி[illegible]ள சிப்பந்திகளுக்கு (திற[illegible]ற்றவர்களுக்கு) தினசரி [illegible]ய பெண்களுக்கு ரூ. 1ம். [illegible]ழி[illegible]ளி, மா அரைப்பு [illegible]தாழிலாளிக்கு ரூ. 1-12-0ம் கொடுக்கப்பட வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

தோல் ஷாப்புகள், தொழிற்சாலை[illegible]ல், [illegible]

மார்க்கெட் நிலவரம்

தங்கம், வெள்ளி

பம்பாய், செப். 19—
(பகல் 2 மணி)

பவுன்	61-10-0
தங்கம்	89/10-89/7
வெள்ளி	160/12-161/3
ஆரம்ப விலை	
தங்கம்	80/8-89/5-80/6
வெள்ளி	160/11; 161/ 161/11
கல்கத்தா	
பவுன்	62-0-0
தங்கம்	90/6-90/2
வெள்ளி	160/14-161/2 161/15

காங்கிரஸ் மைனரிட்டியாயிற்று
குடியாத்தம் முனிசிபல் தேர்தல் முடிவுகள்

குடியாத்தம், செப், 17—

நகரசபைக்கு 28 ஸ்தானங்கள். அதில், 9 ஸ்தானங்கள் போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டன.

16-9-52ல் மிச்சம் 19 ஸ்தானங்களுக்கு தேர்தல் நடைபெற்றது. ஐக்கிய முனிசிபல் தேர்தல் கமிட்டியின் சார்பில் 15 ஸ்தானங்களுக்கு போட்டியிட்டு 5 ஸ்தானங்கள் பெற்றன. காங்கிரஸ் 15 ஸ்தானங்களுக்கு போட்டியிட்டு 10 ஸ்தானங்கள் பெற்றன. சுயேட்சைகள் 10 போட்டியிட்டு 4 ஸ்தானங்கள் பெற்றன. சோஷலிஸ்டுகள் 2 ஸ்தானங்களுக்கு போட்டியிட்டு தோல்வி அடைந்தனர்.

கட்சிகளுக்குக் கிடைத்த ஸ்தானங்களின் விபரம்

ஐக்கிய முனிசிபல் தேர்தல் கமிட்டி	10
காங்கிரஸ்	13
சுயேச்சைகள்	5
	28

17-வது வார்டு கம்யூனிஸ்ட் கட்சியின் டவுன் கமிட்டி செயலாளரும் தொழிற்சங்க தலைவருமான தோழர் வி. கே. கோதண்டராமன (ஐக்கிய முனிசிபல் தேர்தல் கமிட்டியின் அபேட்சகர்) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வி. கே. கோதண்டராமன் வோட்டுகள்	233
நாராயணன் (சுயேச்சை)	152
ஸ்ரீனிவாச முதலியார் (காங்கிரஸ்)	92

25-வது வார்டு ஜெனரல் ஸ்தானத்திற்கு பழனி முதலியார் (காங்கிரஸ்) 383

புருஷோத்தம முதலியார் (ஐக்கிய முனிசிபல் தேர்தல் கமிட்டி) 382

ஒரு ஓட்டு வித்தியாசத்தில் காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றார்.

தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் பெரும் முயற்சிசெய்து ஐக்கிய முனிசிபல் தேர்தல்கமிட்டி அபேட்சகர்கள் வெற்றிபெறாமல் செய்து பார்த்தனர், காங்கிரஸ்காரர்கள் ஓட்டுக்கு ரூபாய் 5 முதல் ரூ. 15 வரை தராத வார்டே கிடையாது என்று பேசிக் கொள்கின்றனர். பலரும் இந்த விஷயத்தில் சாட்சியம் கூறுவதாகவும் தெரிகிறது. 12வது வார்டில் ஒரு நபருக்கு ரூ. 2 கூலி தந்து பொய் ஓட்டு போடுவதற்கு காங்கிரஸ்காரர்கள் அனுப்பிவைத்தவர் பிடிபட்டார். அவரே தன்னுடைய வாக்குமூலத்தில் காங்கிரஸ்காரர்கள் ரூபாய் தந்து அழைத்து வந்ததாக கூறி அதிகாரிகள் ரெகார்டு செய்துள்ளனர். 15-வது வார்டிலும் இதே மாதிரி ஒருவர் பிடிபட்டார். திரு. ஏ. ஜெ. அருணாசல முதலியார் எம். எல். ஏ. (காங்கிரஸ்) பொய் ஓட்டு போடவந்து பிடிபட்டவர்களை எப்படியாவது விட்டு விடும்படி செய்ய தன் செல்வாக்கை உபயோகப்படுத்தி போலிஸ் ஆபீசர்களைக் கேட்டுக்கொண்டார். இதில் உடனே ஐக்கிய முனிசிபல் தேர்தல் கமிட்டி தலைவர் திரு. பி. வி. பத்மநாப நாயுடு தலையிட்டு, அதிகாரிகளை சட்டப்படி நடந்துகொள்ளும்படியும், திரு. அருணாசல முதலியார் எம். எல். ஏ.. (காங்கிரஸ்) அவர்களின் செல்வாக்கிற்கு இணங்கக்கூடாது என்று ஆட்சேபித்தார்.

ஐக்கிய முனிசிபல் தேர்தல் கமிட்டியின் பிரசாரகர்களில் தோழர் அர்ஜுனன் காங்கிரஸ்காரர்களால் தாக்கப்பட்டார். பிரசாரத்திற்காகச் சென்ற மோட்டார்-கார் மைக் இவை தாக்கப்பட்டது, இந்த சம்பவம் டி திரு. அருணாசல முதலியார் எம்.எல்.ஏ., அவர்கள் வீட்டு முன்னிலையில் நடைபெற்றது. அடித்தவர் எம். எல். ஏ. வின் சொந்த அண்ணன் போலீசுக்கு கேஸ் [illegible]ந்து விசாரணையில் இருக்[illegible]

[illegible] பதவிக்காக இப் [illegible] பலத்த பிரசாரம் [illegible]க்கிறது. காங் [illegible]. 1000க்கு [illegible]ர்கள்.

(ந-கி.)

தஞ்சை அவசர சட்டத்திலுள்ள முக்கிய குறைபாடுகள்

தீரும்வரை விடாது போராடுங்கள்

தோழர் கே. பி. நடராஜன் அறைகூவல்

தஞ்சை, செப். 16—

தஞ்சை ஜில்லா வார குத்தகைதாரர், பண்ணையாள் பாதுகாப்பு அவசரச் சட்டத்திலுள்ள மிக முக்கியக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியும், இவைகளை சர்க்கார் உடனடியாக நீக்கும்வரைக்கும் தொடர்ந்து பெருங் கிளர்ச்சியை விவசாய மக்கள் நடத்த வேண்டுமெனக் கோரியும் தஞ்சை ஜில்லா விவசாய சங்கக் காரியதரிசி தோழர் கே. பி. நடராஜன் கீழ்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்.

தஞ்சை ஜில்லா வார குத்தகைதாரர் பண்ணையாள் பாதுகாப்பு அவசர சட்டத்தை சென்னை சர்க்கார் பிரகடனம் செய்துள்ளார்கள். இதைக் காங்கிரஸ் பிற்போக்கு சக்திகள், விவசாயிகளின் சர்வரோக நிவாரணி என்றும், வரப்பிரசாதம் என்றும் வர்ணிக்கிறது. ஏழை விவசாயிகளை இன்னும் நிலப்பிரபுத்துவ ஈரண்டலுக்கு ஆளாக்கவும் வகை செய்கிறது. இதற்கு இரையாக மாட்டார்கள் தஞ்சை விவசாயிகள். இச்சட்டத்தை வடபாதிமங்கலம், குன்னியூர், மடாதிபதிகள் போன்ற நிலப்பிரபுக்கள் வரவேற்றிருப்பதே இந்த சட்டத்தின் உண்மை சொரூபம் அம்பலமாகிறது.

போராட்ட பரம்பரை

தஞ்சை ஜில்லாவில் விவசாய சங்கம் 1943ம் வருஷத்திலிருந்தே விவசாயிகளின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலைக்காக நிலப்பிரபுத்துவத்தையும் அதை தாங்கி நிற்கும் ஏகாதிபத்திய, காங்கிரஸ் ஆட்சியையும் எதிர்த்து குறைந்தபக்ஷ கோரிக்கைகளான, சாஸ்வத உழவு உரிமை கடன் ஒத்திவைப்பு, குடியிருப்பு மனைக்கட்டை சொந்தமாக்க, வார உயர்வுக்காக, பண்ணையாட்களின் கூலி உயர்வுக்காகவும், தண்ட வரிவசூலை எதிர்த்தும், ஜாதிக் கொடுமையை எதிர்த்தும், பல்லாயிரக்கணக்கான விவசாயிகளை ஸ்தாபன ரீதியாக ஒன்று திரட்டி, வீரதீர போராட்டங்கள் நடத்தி சில சலுகைகளும் பெற்றுவந்திருக்கிறது.

ஒப்புயர்வற்ற தியாகிகளான தோழர்கள் களப்பால் குப்பு, நடேசன், இரணியன், ஆறுமுகம், சிவராமன், ராசு இவர்களின் உயிரைக் குடித்தும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளை சிறையில் தள்ளி, கொடுமைப்படுத்தியும் ஆயிரக்கணக்கான கிராமங்களில் புகுந்து ரௌடிகளை கொண்டும், போலீசைக் கொண்டும், விவசாயிகளையும், விவசாயி பெண்களையும் சித்ரவதை செய்தும், கற்பழித்தும் சொத்துகளை சூறையாடியும் அடக்கிவிடலாம் இவ்வெழுச்சியை என்று எண்ணியது நிலப்பிரபுத்துவ காங்கிரஸ் ஆட்சி.

உரிமைக்காக போராடுவோம், பணிய மாட்டோம் என்று வீரமுடன் எதிர்த்து நின்றான் தஞ்சை ஜில்லா விவசாயி. இதன் பயனாய், குறைந்தபட்ச நிவாரணம் அளிக்கக்கூடிய சுப்ரமணியம் கமிட்டி ரிபோர்ட்டை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது சென்னை அரசாங்கத்துக்கு.

விவசாயிகளின் எழுச்சியை கண்டு குலை நடுங்கிய நிலப்பிரபுத்வ மிராசுதார்கள், அடக்கு முறையைப் பயன்படுத்திக் கொண்டு 1946-47 வருஷத்திலிருந்தே நிலத்திலிருந்தும் குடியிருப்பு மனைக்கட்டிலிருந்தும், பண்ணை வேலையிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான, பாடுபடும் விவசாயிகளை வெளியேற்ற ஆரம்பித்து விட்டார்கள், இதை ஆதரித்து போலீஸ் பாதுகாப்பு அளித்தனர், காங்கிரஸ் ஆட்சியாளர்கள்.

1946 லிருந்தே நிலவெளியேற்றம்

விவசாயிகள் கடந்த தேர்தலில் காங்கிரசைப் புறமுதுகு காட்டி ஓடச்செய்தனர். இதைத் தொடர்ந்து, மேலும் நிலவெளியேற்றத்தை எதிர்த்து, ஜில்லா பூராவிலும் பலத்த கிளர்ச்சியும் ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. திருத்துறைப்பூண்டி நிலவெளியேற்ற எதிர்ப்பு மகாநாட்டில் 60,000 மக்கள் ஒன்றுதிரண்டு தடையைமீறி நிலத்தில் இறங்குவோம் என்று உறுதி பூண்டு, போர்க்கொடி உயர்த்தினர். இதைத் தொடர்ந்து தஞ்சையில் ஆரம்பமான போராட்டத்தின் விளைவாகவும் தமிழ்நாடெங்கும் தொழிலாளிகள், விவசாயிகள், பொதுமக்கள் நடத்திய கிளர்ச்சியின் காரணமாகவும் ராஜாஜி பணிந்து அவசரச்சட்டம் கொண்டுவரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

தான்தோன்றித்தனமாக நிலத்திலிருந்தும் வேலையிலிருந்தும் வெளியேற்றுவதைத் தடுத்து 5 வருட காலத்திற்கு உத்திரவாதமும், கோர்ட் மூலம் விசாரணைக்குப் பிறகு தான் நீக்கமுடியும் என [illegible] நிபந்தனையும் அவசரச் [illegible] இல் இடம் பெற்றி[illegible] வேற்கத்தக்கது. பெற்ற 1948 [illegible] பந்தத்தை [illegible] ளுக்கும் [illegible]

போதிலும், கொடுக்க மறுக்கும் மிராசுதார்களைக் கட்டாயப்படுத்த எவ்வித ஷரத்தும் அவசரச் சட்டத்திலில்லாதது ஒரு மிகப்பெரிய குறைபாடாகும். அதற்கான வழிவகைகள் சட்டத்தில் இடம்பெற வேண்டும்.

முக்கியமான குறைபாடுகள்

வாரகுத்தகைதாரர்களின் பல ஆண்டு போராட்டத்தின் பயனாய்ப் பெற்ற சுப்ரமணியம் கமிட்டி ரிபோர்ட்டிலுள்ள ஷரத்துகளைக் கூட நிராகரித்துவிட்டு, 55, 60, 72 2/3 வாரதாரருக்கு 55, 60, 72 2/3 வார விகிதம் மூடி மறைக்கப்பட்டு, மிராசுதார்களுக்கு ஆக்கம் அளிக்கும் முறையிலே 40 சத விகித வாரம் என்று நிர்ணயித்தும், அறுவடை கால செலவு, உரம், மராமத்தில் ஒரு பகுதியை விவசாயிகளின் மீது திணித்திருப்பதும் இன்று இடைத்தரகர்களுக்கு ஆதரவாகவும் அமைந்திருக்கிறது. இவைகளை விவசாயிகள் நடைமுறையில் திருப்புப்பிரகாரம் செய்யாமல் தடுக்க வேண்டும். விவசாயிகள் தாங்கமுடியாத வார விகிதம் கொடுக்க வேண்டியிருக்கிறது. சுப்ரமணியம் கமிட்டி சிபாரிசிலுள்ள வார விகிதம் கிடைக்கும்வரை ஓயமாட்டோம் என்ற போராட்டம் தொடர்ந்து நடத்த திடம் கொண்டிருக்கிறார்கள்.

நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்ட விவசாயிகளில், 1950 வருஷத்திற்கு பிறகு வெளியேற்றப்பட்ட வார குத்தகைதாரர்களுக்கு தான் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர, போராடிய விவசாயிகள் 1946லிருந்தே வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதை மறந்துவிட முடியாது. எனவே 1946க்குப் பின்னர் வெளியேற்றப் பட்டவர்கள் அனைவருக்கும் நிலம் திரும்பி அளிக்கப்பட வேண்டும்.

ஜில்லாவில் சகல வார குத்தகைதாரர்களும் குத்தகை பாக்கி கடன் காரர்களாகத் தான் இன்று இருக்கிறார்கள். இதற்குக் காரணம் தாங்க முடியாத குத்தகை வார விகிதமேயாகும். விவசாயிகள் கடனை அடைக்க வழியில்லாமல் திண்டாடித் தவிக்கிறார்கள். பழைய கடனை விவசாயிகள் உடனே கொடுக்க வேண்டும் என்று சட்டத்தில் கண்டுள்ள நிபந்தனையால் நிலம் திரும்பப் பெறப்படுவது நடைமுறையில் தடை செய்யப் படுகிறது. இந்த ஷரத்துப்படி ஒருவருக்குக்கூட நிலம் திரும்பக் கிடைக்கப் போவதில்லை. அது உடனே சட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டும்.

ஒரு வேலிக்குட்பட்ட மிராசுதார்களை இச்சட்டம் பாதிக்காது என்றிருப்பது, சட்டத்தின் நோக்கமான, சகல பகுதி விவசாயிகளுக்கும் நிவாரணமளிப்பது என்பதை வெறும் கேலி கூத்தாக்குகிறது. 40 சத விகித விவசாயிகளுக்கு நிவாரணமளிக்க மறுக்கிறது. இதனால் கிராமங்களிற் குழப்பமும் உற்பத்தி தடையும் ஏற்படும். இதைத் தவிர்க்க, அந்த ஷரத்தை சட்டத்திலிருந்து நீக்கவேண்டும்.

குத்தகை முறைதான், இதுவரை விவசாயியை கடனாளியாக்கி வந்ததற்குக் காரணம். இந்தக் குத்தகை முறை இனி நீடிக்க அனுமதிக்கக்கூடாது. ஆதலால் சட்டத்தில் குத்தகை முறை என்பதை எடுத்துவிட்டு, சகலமும் வார முறையிலேயே தீர்க்கப்பட வேண்டும் (ரொக்க குத்தகை தவிர).

தலைமுறை தலைமுறையாக கிராமத்தில் வாழ்ந்து, காடுகளைத் திருத்தி கழனியாக்கி, நெற்களஞ்சிய மாக்கிய விவசாயிகளின் நிலத்தைப் பிடுங்கிக் கொண்டதோடு நிற்காமல், குடியிருக்கும் மனைக் கட்டிலிருந்தும் விவசாயிகளை நிலப்பிரபுக்கள் வெளியேற்றி யிருக்கின்றனர். எனவே, 1946 லிருந்து வெளியேற்றப்பட்ட விவசாயிகளுக்குத் திரும்ப மனைக்கட்டு கிடைக்கவும், எக்காரணத்தைக் கொண்டும் மனைக்கட்டிலிருந்து வெளியேற்றக் கூடாது, என்ற விதியும் சட்டத்தில் இடம்பெற வேண்டியது மிகவும் அவசியம்.

நல்ல அறிவிப்[illegible]

சட்டம்வந்துவி[illegible] சாதாரண ஏ[illegible]வச களுக்கு எந்தவி[illegible] அறிவிப்பும் செ[illegible] வில்லை. ம[illegible] காலம் ஒரு மா[illegible] நிர்ணயித்து விட்டு வி[illegible] களுக்கு சரியாக அறிவிக்காமல் இருப்பது, விவசாயிகளை ஏமாற்றுவதேயாகும். என மேலும் 2 மாதம் தவணை [illegible]கப்பட வேண்டும்.

நம் ஸ்தாபனத்தைப் பலப்படுத்த வேண்டும். விரிவு படுத்த வேண்டும். கிராம ஐக்கியத்தைக் கட்ட வேண்டும். சங்கம் இல்லாத இடங்களிலெல்லாம் விவசாய சங்கங்கள் நிறுவப்பட வேண்டும். எதிரிகளின் சூழ்ச்சிகளும், சீர்குலைவு வேலைகளும் முறியடிக்கப்பட வேண்டும்.

இதைச்செய்ய சகல பகுதி விவசாயிகளும் உடனடியாக செங்கொடி விவசாயிகள் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர வேண்டும். நிலம் மாற்றப்பட்ட வாரக் குத்தகை விவசாயிகளும், நீக்கப்பட்ட பண்ணையாட்களும், சட்டத்தில் உள்ளபடி கூலி கிடைக்கப் பெற்ற பண்ணையாட்களும் மனைகட்டை இழந்த விவசாயிகளும் அந்தந்த பகுதியிலுள்ள செங்கொடி விவசாயி சங்கத்தை நாடி, நிவாரணத்திற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். மகஜரில் கையெழுத்திட்டு மந்திரிகளுக்கு அனுப்ப வேண்டும். கிராமங்கள் தோறும் கூட்டங்கள் நடத்தி தீர்மானங்கள் நிறைவேற்றி சர்க்காருக்கு அனுப்ப வேண்டும். அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் தஞ்சை ஜில்லா விவசாயிகள் மகாநாட்டிற்கு திட்டங்களைத் தீட்டுங்கள், நிதி அளிக்கத் தயாராகுங்கள். இதைவிடாமல், சளைக்காமல் செய்து முடித்தால்தான் மிராசுதார்களின் கைக்கூலியாட்சியை இணங்க வைத்து, நேர்மையான சட்டத்தைக் கொண்டு வரச் செய்ய முடியும். உங்கள் பரம்பரைக்கொப்ப இன்றே கிளர்ச்சிக்கான போர்க் கொடியை உயர்த்துங்கள்.

கிரேக்க விமான அதிகாரிகளுக்கு மரண தண்டனை

ஏதன்ஸ், செப். 18—

விமானப்படை நீதிமன்றத்தில் நடந்த ஒருமாத விசாரணைக்குப் பின், நேற்று 2 கிரேக்க விமானப்படை அதிகாரிகளுக்கு மரண தண்டனையையும், 11 பேர்களுக்கு 10 வருடம் முதல் ஜனம தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. 5 பேர் விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் எல்லாம் கம்யூனிஸ்ட்டென்று சர்க்கார் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது.

அரவங்காடு கார்டைட் தொழிலாளர் வெற்றி!

மற்ற தொழிலாளருக்கு மலைவாழ்வுபடி கொடுக்கப்படவில்லை

அரவங்காடு, செப். 17—

மலைவாழ்வு படி தேவையென சகல மத்திய சர்க்கார் சிப்பந்திகளும் தொடர்ந்து கிளர்ச்சி செய்ததும், 24-8-52-ல் மாபெரும் அணிவகுப்பு குன்னூரில் நடைபெற்றதும், அரவங்காடு கார்டைட் பாக்டரி தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் ஓட்டு எடுக்க தயாரானதும் வாசகர்கள் அறிவார்கள். இதில் ரயில்வே தொழிலாளிகள் தங்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்படும் 23 சதவிகிதத்தை 35 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமெனக் கோரினர். மந்திரிகள், பாதுகாப்பிலாகா அதிகாரிகள் அனைவரும் வந்து போனபின் அரவங்காடு தொழிலாளிகளுக்கு ஹில் அலவன்ஸ் (மலைவாழ்வுபடி) கொடுக்க சர்க்கார் சம்மதித்திருக்கிறது.

மலைவாழ்வு படி கொடுக்கப்படுவதுமேயாகும் என்ற கொள்கையை சர்க்கார் ஒப்புக்கொண்டுவிட்டது. (சம்பளசுவிஷன் சிபாரிசு கூட) வசர்க்கு வந்த கிளர்ச்சி, கார்டைட் பேக்டரியின் முக்கியத்துவம் ஆகியவை, சர்க்காரை கொள்கையை ஏற்று பணியும்படி செய்த போதிலும் அவர்களுடைய நடைமுறை, தொழிலாளிகளும் ஜனங்களும் எப்படியும் இருப்பதுடன் அமைவியாக வாழ விடக்கூடாது என்பதாகவே இருக்கிறது. மேலும் கிளர்ச்சியை வலுக்க செய்வதாக குழப்பத்தை உண்டாக்குவதாக இருக்கிறது.

1. கார்டைட் பாக்டரியில் 1950ல் சர்வீஸில் இருந்தவர்களுக்கு மட்டும் மலைவாழ்வுபடி அதன்பின் வேலைக்கமர்ந்தவர்களுக்கு இல்லை. அதுவும் 20 சதவிகிதமே.

2. மலைவாழ்வு படி பெறுகிறவர்களுக்கும் காம்பன்சேட்டரி அலவன்ஸ், வீட்டு அலவன்ஸ் இதுவரை பெற்று வந்தது இனி கிடையாது.

அதாவது ஒரு கையில் கொடுத்து, மற்றொரு கையில் பறிப்பது. இதனால் தொழிலாளிகளிடையில் அதிருப்தி.

3. இதர மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கு இன்னும் மலைவாழ்வுபடி கொடுக்க உத்தரவாகவில்லை.

4. இந்த கிளர்ச்சியில் தலைமை வகித்த ரயில்வே தொழிலாளிகளே பதிவாங்க சர்க்கார் முயலவில்லை. இதுவரை அவர்கள் பெற்று வந்த மலைவாழ்வுபடியை பறிக்க ஆரம்பித்துள்ளனர். புதிதாக பலர் நீலகிரி மாற்றப்படுகிறவர்களுக்கு அப்படி மறுக்கப்படுகிறது. இது விஷயத்தில் என்ன வென்றால் உதகைமிருந்து குன்னூருக்கோ, நீலகிரி ஜில்லாவிலிருந்து வேறு மாற்றப்பட்டாலும் அந்த படி மறுக்கப்படுகிறது. புதிதாக வருகிறவர்களுக்கும் படி மறுக்கப்படுகிறது. இந்த ஒரு வாரத்திற்குள்ளாக, பல அங்குள்ள விருப்பமில்லாத இடங்களுக்கெல்லாம் மாற்றம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இதனுல் ரயில்வே தொழிலாளிகளின் மத்தியில் ஓர் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே சகல பகுதியினரிடத்தும் இன்று சர்க்காரின் நடவடிக்கை பரபரப்பையும், அதிருப்தியையும் உண்டாக்கியுள்ளது.

வானொலி

செப். 21 ஞாயிறு

சென்னை (41·32மீ)

காலை

- 7-00 ஸ்வாகதம்
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 நதி ஓசையா (இசைத் தட்டுகள்)
- 8-00 ஆங்கிலத்தில் செய்தி

பகல்

- 1-00 எஸ். கோவிந்தராஜன் (ராகம்)
- 1-30 கீதாஞ்சலி
- 1-40 ஹிந்தியில் செய்தி
- 1-50 சுதம்பம்
- 2-00 தமிழில் செய்தி
- 2-10 குரல்வகை
- 2-30 திருச்சியின் உள்ளபடி
- 3-00 ஏ. நாராயண ஐயர் (வீணை)
- 4-00 விருந்தி (கதாப்ரசங்கம்)
- 4-15 ஐயப்போ நீ (கலை நடனம்)
- 4-30 ஐரோப்பிய சங்கீதம்

மாலை

- 5-30 எஸ். அனந்த கிருஷ்ணன் -பாட்டு
- 6-00 ஆங்கிலத்தில் செய்தி
- 6-10 அறிவிப்புகள்
- 6-15 கே. சாந்தாம்பாள் -பாட்டு
- 6-45 எஸ். மணி -பாட்டு
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 கதம்பம்
- 7-45 ராதா, ஜெயலக்ஷமி -பாட்டு
- 9-00 ஆங்கிலத்தில் செய்தி
- 9-15 அமெரிக்க நீக்ரோ கிராமப் பாடல் (ஆங்கிலத்தில் பேச்சு)
- 9-30 ஆர். நாராயணமூர்த்தி -பாட்டு
- 9-45 ஐரோப்பிய சங்கீதம்

திருச்சி (389·6மீ)

காலை

- 7-10 கீதாம்பம்
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 ஏ. ருக்மணி (வீணை)
- 8-00 ஆங்கிலத்தில் செய்தி
- 8-15 சிதம்பரம்

பகல்

- 12-00 நிறைமனம்
- 12-30 சூர்யகாந்தி
- 1-00 மணிமலர்
- 1-30 நாகஸ்வரம்
- 1-40 ஹிந்தியில் செய்தி
- 1-50 குரல் வகை
- 2-00 தமிழில் செய்தி
- 2-10 பெண்ணுலகம்
- 2-30 செண்டு

மாலை

- 5-30 ஏ. ருக்மணி (வீணை)
- 5-45 எ. என். அய்யாமணி -பாட்டு
- 6-05 அறிவிப்புகள்
- 6-10 நீங்கள் கேட்டவை
- 6-30 கிராம நிகழ்ச்சிகள்
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 சித்ரகானம்
- 7-45 கிராமத்தின் பொது வாழ்வு
- 8-00 எஸ். அல்மேலு -பாட்டு
- 9-00 ஆங்கிலத்தில் செய்தி
- 9-15 வஞ்சம் தீர்ந்தது (நாடகம்)
- 9-45 நேஷனல் புரோகிரும்

★

தோழர்களே நினைவில் வையுங்கள்

சென்னை நகரசபைத் தேர்தல்

20-9-'52-ந் தேதி சனிக்கிழமை

மகத்தான சோதனை நாள்

காங்கிரசின் ஆதிக்கத்தை முறியடிக்க, முற்போக்கு சக்திகளின் ஒன்றுபட்ட முயற்சியான நகர மக்கள் கூட்டணி அபேட்சகர்களுக்கு புலி சின்னமுள்ள பெட்டியில் உங்கள் வோட்டுகளை வழங்குவீர்களாக.

டிவிஷன்கள் :		பெயர்கள் :
20. செம்பியம்	...	காஞ்சி. மணிமொழியார்
,, (தனித்தொகுதி)	...	எம். குருநாதன்
21. அயன்புரம்	...	பக்தவத்சலம்
28. சீதப்பாக்கம்	...	எம். பாலசுப்ரமண்யம்
29. நேப்பியர்பார்க்	...	அ. பொ. அரசு
30. சிந்தாதிரிப்பேட்டை	...	பொன்னுரங்கம்
31. கோமலீஸ்வரன்பேட்	...	சம்பத்து
33. ஆயிரம் விளக்கு	...	கே. மாணிக்கவாசகம்
34. நுங்கம்பாக்கம்	...	வே. சுப்ரமண்யம்
,, (தனித்தொகுதி)	...	எ. கே. சாமி
35. கோடம்பாக்கம்	...	கே. விநயகம்

அன்புமிக்க வாக்காளர்களே! 20-ந் தேதியன்று முற்போக்கு சக்திகளின் கூட்டு முயற்சிக்குப் பேராதரவு தருவீர்களாக.

நகர மக்கள் கூட்டணி.

தூத்துக்குடியில்

தூத்துக்குடி, செப். 17—

13-9-52, 15-9-52 தேதிகளில் முனிசிபல் தேர்தலுக்கு நாமினேஷன் தாக்கல் செய்திருந்தவர்களில் 6 பேர்கள் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றுள்ளனர். இதன்மூலம் 24-வது வார்டில் நகர மக்கள் முன்னணி அபேட்சகர் தோழர் பீர் இஸ்மாயிலுக்கும் காங்கிரஸ் வாதியும் தற்போதைய சேர்மனுமான திரு. சுந்தரலிங்கத்திற்குமிடையேதான் போட்டி. காங்கிரஸ் எதிர்த்துப் போட்டியிடும் தோழர் பீர் இஸ்மாயில் யார்?

தோழர் பீர் இஸ்மாயில் மிகுந்த ஏழைக் குடும்பத்தில் பிறந்து, ஒரு மில்தொழிலாளியாக வேலைசெய்து வந்தவர். அப்பொழுது தொழிலாளர்களின் கட்சியாகிய கம்யூனிஸ்டு கட்சியால் ஆகர்ஷிக்கப்பட்டு, கட்சியில் சிறந்த ஊழியரானார். தனது திறமையான பேச்சினாலும், சகலருடன் பழகும் தன்மையினாலும் நகர தொழிலாளிகளின் அன்புக்கு பாத்திரமானார். 1949ல் பாதுகாப்பு கைதியாக மதுரை, வேலூர் சிறைச்சாலையிலிருந்தார். பின் நெல்லை சதி வழக்கில் சேர்க்கப்பட்டு 2½ வருடங்களுக்குப் பின் நிரபராதி என விடுதலை செய்யப்பட்டார். இதனால் தன் வேலையை இழந்து தொடர்ந்து பொது ஜன சேவை செய்து வருகிறார்.

ஐ·ஜ·மு· வாசகசாலை கூட்டம்

தூத்துக்குடி, செப். 17—

தூத்துக்குடி (சண்முகபுரம்) ஜனநாயக ஐக்கிய முன்னணி வாசகசாலை அங்கத்தினர்கள் கூட்டம் தோழர் என். இளைய பெருமாள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் 22வது வார்டு ந. ம. மு. அபேட்சகர் தோழர் தங்கப்பழம், நகர கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் பி. ஐசக் முதலியவர்கள் கலந்து கொண்டனர்.

தோழர் தங்கப்பழத்தை ஆதரித்து தேர்தல் நடைமுறை வேலை செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

நெல்லை சதிவழக்குத் தோழர்களை விடுதலை செய்க!

தி. மு. க. கூட்டத்தில் தீர்மானம்

புரையூர், செப் 15—

14-9-52 ல் புரையூரில் த. தனசேகரன் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் அடியில்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. சென்னை சட்டசபை உறுப்பினர் கே. டி. கோசல்ராம்மீது திரு. ராஜாபலவேசமுத்து கொடுத்த குற்றச்சாட்டை சர்க்கார் பகிரங்க விசாரணை நடத்தவும்.

2. தேரியில் ஜி. கல்யாணசுந்தரம் என்பவருக்கு 99 ஏக்கர் நிலத்தை சர்க்கார் கொடுத்திருப்பதை பிடுங்கி நிலத்தின் நேரடி விவசாயிகளுக்கு கொடுக்கும்படி இக்கூட்டம் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது.

3. நெல்லை சதிவழக்குத் தோழர்களை சர்க்கார் உடனே விடுதலை செய்யவேண்டும்.

அ. இ. பத்திரிகை எழுத்தாளர் காரிய கமிட்டி

புதுடில்லி, செப். 18—

அகில இந்திய பத்திரிகை எழுத்தாளர் சம்மேளனத்தின் காரியக் கமிட்டி, புதுடில்லியில் செப். 21-ந்தேதியன்று கூடும். (முன்பு அறிவித்தது போல் 20-ந்தேதியல்ல.)

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை எதிர்த்து

கென்யா மக்களின் போராட்டம்

புகாரெஸ்ட் (விமான தபால்)

கென்யாவில் [illegible] சுதேசி ஆப்ரிக்க மக்கள் [illegible]டந்த ½ நூற்றாண்டுக் கதிகமாகவே பிரிட்டிஷ் ஏகாதிபத்ய வாதிகளால் மிருகத்தனமான சுரண்டலுக்கு ஆளாகி வந்துள்ளனர். இங்கு நிற — இனப் பாகுபாடுகள் தலைவிரித்தாடுகின்றன. சாதாரண மனித உரிமைகளும் கூட மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளன.

விவசாயத்திற்கும், கால்நடைகள் மேய்ப்பதற்கும் ஆப்ரிக்க மக்கள் உபயோகப்படுத்தி வந்த நிலங்களெல்லாம் அவர்களி[illegible]மிருந்து பறிக்கப்பட்டு விட்டன. சுமார் 50 லட்சம் ஆப்ரிக்கர்கள், அவர்களுக்கென்று தனியாக ஒதுக்கப்பட்ட, மிகக் குறைந்த நிலப் பரப்புள்ள (83000 சதுர கிலோமீட்டர் பிரதேசத்தில் மிகவும் நெருக்கமாக வாழும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

அதே சமயத்தில் 3000 ஏகாதிபத்யவாதிகள் மிகவும் அருமையான 27,000 சதுர கிலோமீட்டர் பரப்புள்ள அருமையான பிரதேசத்தை [illegible]ந்தமாகக் [illegible] கொண்டுள்ள[illegible] ஒதுக்கப்[illegible]ட பிரதேசங்[illegible]ல் வாழும் [illegible] ஆப்ரிக்க ம[illegible] [illegible]ல்லாண[illegible] [illegible] பட்ட[illegible]ரியால் [illegible]ப்பட்டு வருகின்றனர். [illegible] சாயம் செய்ய[illegible]பட்ட[illegible] [illegible]லங்களில் சென்[illegible] அமா[illegible] [illegible]ழ்க்கை நடத்த அவ[illegible] [illegible] செய்த [illegible]ம்பற்சிகளுக்கு [illegible] [illegible]ரீக[illegible]ான அடக்கு[illegible] 'பரி சா'கக் கிடைத்த[illegible] [illegible]ாம், அங் நிலங்களெ[illegible] [illegible]ட்டப்பட" வெள்[illegible] [illegible] தி[illegible]ாதிகளுக்கு [illegible]மாம். [illegible]ணமாக [illegible]லெங் குரு [illegible] என்ற [illegible] [illegible]தசத்தி[illegible] [illegible]

எதிர்த்து கென்யா மக்களின் விடுதலை இயக்கம் கென்யாவில் வளர்ந்துகொண்டுவருகிறது.

பிரிட்டிஷ் நிர்வாகம், விசேஷ தொழிலாளர்—எதிர்ப்பு சட்டங்களை நிறைவேற்றியுள்ளது. அப்படியிருந்தும் 1949 நடுவில் கிழக்காப்பிரிக்க தொழிற்சங்க காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டது. அடக்குமுறைகளோ, தொழிலாளி வர்க்கத் துரோகிகளோ, வலதுசாரித் தலைவர்களோ பிரிட்டிஷ் தொழிற் சங்கங்களின் இந்தத் தொழிற்சங்கக் காங்கிரசின் நடவடிக்கைகளைத் தடுக்க முடியவில்லை. தொழிலாளிகளின் வாழ்க்கை நிலைமைகள் மேலும் உயர வேண்டுமென்பதற்காக அது தொடர்ந்து போராடி வருகிறது. மொம்பாஸா து[illegible]முகத் தொழிலாளிகளும், இன்னும் மலைப் பிரதேசங்களிலுள்ள இதர தொழிலாளிகளும் பல சமயங்களில் வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டனர். அந்த வேலைநிறுத்தங்களை உடைப்[illegible]தற்காக போலீசும், துருப்புகளும் ஏவப்பட்டன. ஆயினும் தொழிலாளிகளின் ஒற்றுமையினாலும். போர்க்குணத்தினாலும், பல சந்தர்ப்பங்களில் தொழிலாளிக[illegible] தங்கள் அன்றாடம் கோரிக்கைகளில் வெற்றிபெற்றுள்ள[illegible]ர்.

ஏகா[illegible]த்திய அடிமைத்த[illegible] எதிர்த்தும், பிரிட்[illegible]டிஷ் [illegible]னி வெறியர்களால் பிடுங்கப்பட்ட நிலத்தைத் திரும்பப் பெறவும் நடத்தப் ப[illegible] போரா[illegible]ட[illegible]களில் கென்யா ஆப்ரிக்க[illegible] சம்மேளனம் என்ற ஸ்தாபனம் தீவிரப் பங்காற்றியு[illegible] இந்த ஸ்தாபனம் 19[illegible]ல் ஏற்படுத்தப்பட்டது. ஒரு லட்[illegible] மெம்பர்கள் இதில் அங்[illegible]னர்களாயுள்ளனர். கிழ[illegible]காப்பிரிக்க இந்திய [illegible]சிய காங்கிரஸு[illegible] [illegible]ஸ்[illegible] [illegible]

பாரதக் கொடி பீடியை பகிஷ்கரியுங்கள்

போராடும் கோவைத் தொழிலாளர் வேண்டுகோள்

கோவை செப். 14—

கோவை 'மணியம்மன் கோயில் மைதானத்தில் 12-9-52 நடந்த பொதுக்கூட்டத்தில் டி. பாலன், தி. மு. க. செயலாளர், இராசமாணிக்கம், கே. எஸ். வாசுதேவ[illegible] பக்கீர் முகமது எஸ். நசீம் முதலியவர்கள், பாரதக்கொடி பீடி முதலாளி கத[illegible]டைப்பு செய்து 84 தொழி[illegible]ளி குடும்பங்களை பட்டினி[illegible] போட்டிருப்பதை கண்டித்து[illegible] சர்க்கார் அதிகாரிகள் [illegible]த சமரச முயற்சியை பி[illegible]தமாக ஏற்றுக் கொள்ள[illegible]த்த முதலாளியின் பேரி[illegible]டுமையான நடவடிக்கை[illegible] எடுக்காத[illegible]தக் [illegible] [illegible]வரை லாட்டு[illegible] [illegible]ந்த முதலா[illegible] கூறி ஜனங்[illegible] [illegible] தொழிலாளி [illegible] செய்யும் [illegible]த்துக்காட்டு [illegible] மு[illegible]ளிகள் [illegible] உடை[illegible] தயாக [illegible] செயல் [illegible]ிவதை [illegible]ட்டியும் [illegible]ாரதக் [illegible]களை, கதவடைட் [illegible] வாபஸ் [illegible]வா[illegible] [illegible]ட்டுக்கு வரையி[illegible] புடிஷ்கரிக்க வே[illegible] [illegible]தொழிலாளிகளை [illegible]க்களையும் கேட்[illegible]

டுக்கொண்டும் பீடித்தொழிலாளிகளின் போராட்டத்திற்கு பொருள் உதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

கூட்டத்திற்கு முன் ஒரு பிரம்மாண்டமான ஊர்வலம் நகரின் முக்கிய தெரு வழியாக சுற்றி வந்தது.

பீடித்தொழிலாளிகளை ஆதரித்து கடலை வறுவல் தொழிலாளிகள் ஓர் ஊர்வலம் கதவடைப்பு நோட்டீஸ் வாபஸ் வாங்கி எல்லா தொழிலாளிகளுக்கும் வேலை கொடுக்கும் வரையில் "பாரதக் கொடி பீடியை [illegible] வாங்க[illegible]ர்கள்" என்றுகோ[illegible] கடைக்கார[illegible] பேசிப்[illegible]

பாகிஸ்தா[illegible] கோது[illegible]

வா[illegible]

7·1 கே[illegible] புள்ள [illegible] ரிக்கா பாகிஸ்தா[illegible] [illegible]தரும்.

[illegible]க அ[illegible] [illegible] இஸ்[illegible] [illegible] ஒரு [illegible]யும் [illegible]

நாகர்கோவில்

மின்சாரத் தொழிலாளருக்கு நிதி அளிப்பீராக

இந்திய கம்யூனிஸ்ட் கட்[illegible]யின் திரு-தமிழகக் கமிட்டி வேண்டுகோள்

தொழிலாளி வர்க்கத்தின் பரம விரோதியாகிய பயோனியர் குமாரசாமியின் அடக்குமுறையை எதிர்த்து மின்சாரத் தொழிலாளர்கள் நடத்திய போராட்டம் மகத்தானது. அப்போராட்டத்தின் முக்கியத்துவத்தை பொது மக்கள் அனைவரும் அறிவர். பொதுமக்களின் அமோக உதவியாலேயே அப்போராட்டம் வெற்றிகண்டது; பயோனியர் முதலாளியும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். ஒப்பந்தப்படி நடக்க பயோனியர் முதலாளி மறுத்ததால் ஹைக்கோர்ட் வரையிலும் வழக்கு நடத்தும்படி ஆயிற்று. இந்த வழக்கில் ஹைக்கோர்ட் சிங்கிள் பெஞ்சு பயோனியருக்கு சாதகமாக தீர்ப்பளித்திருக்கின்றது. இதை எதிர்த்து புல்பெஞ்சில் அப்பீல் வழக்கு நடத்தி வெற்றி காண வேண்டிய திருக்கின்றது. இதற்கு குறைந்தது 500 ரூபாய் உடனடியே தேவை. பொதுமக்களின் உதவியாலேயே இந்தப் போராட்டத்தை இதுவரையில் நடத்த முடிந்தது. இந்த வழக்கை சரிவர நடத்தவில்லையானால் தொழிலாளி வர்க்கத்திற்கே பெரும் இடிவு ஏற்படும். எனவே தொழிலாள வர்க்கத்திடமும் ஜனநாயக சக்திகளுடனும் அன்பு கொண்ட எல்லோரும் பொருளுதவி அளிக்கவேண்டும் [illegible] அனபுடன் கேட்டுக் [illegible]ப்படுகின்றனர். வர்க்க[illegible] உணர்ச்சியுள்ள எல்லா தொழிலா[illegible]ர்களும், நல்லெண்ணம் படைத்த எல்லோரும் தங்களால் இயன்ற பொருள் [illegible]தவியை அளிக்க வேண்டும். [illegible]ர தொழிலாளரின் போராட்டத்தை நடத்துவதற்கான நன்கொடைகளை, தலைவர், மதன் திருவிதாங்கூர் மின்சார தொழிலாளர் யூனியன், சகாயவிலா[illegible] நாகர் கோவில் என்ற[illegible] [illegible]துக்கு [illegible]னு[illegible] [illegible]கொள் [illegible]

[illegible]9—1952, [illegible] கமிட்டி, [illegible]

வேலை நிறுத்த உரிமை பறிக்கப்படக்கூடாது

ஹிந்து மஸ்தூர் சபா கோரிக்கை

பம்பாய், செப். 18—

தொழில் உறவு சம்பந்தமான கேள்விகளுக்கு மத்திய தொழி[illegible]ளர் மந்திரிக்கு அனு[illegible]ள்ள பதிலில் சோ[illegible] [illegible]னால் நடத்தப்படு[illegible] ஹிந்து மஜ்தூர் சபா தொழிலாளிகள் முதலாளிகளிடம் கூட்டு முறையில் பேரம் பேசி வேலை நிறுத்த உரிமை இருக்க வேண்டுமென்று கூறியுள்ளனர்.

அக்டோபர் 8ல் நைனிதாலில் இந்திய சர்க்கார் நடத்தவிருக்கும் முக்கூட்டு தொழிலாளர் மகாநாட்டில் சோஷியலிஸ்டுகளின் யோசனைகள் விவாதிக்கப்படும்.

ஜனநாயக அமைப்புள்ள சமூக அமைப்பில் வேலை நிறுத்த உரிமை இருக்கவேண்டும் என்று அது கூறுகிறது. வேலை நிறுத்த உரிமை இல்லாவிட்டால் கூட்டு பேரத்தில் வெற்றி காண முடியாது. "உற்பத்தியை அதிகரிப்பதில் எங்களுக்கும் அக்கரை உண்டு ஆனால் வேலை நிறுத்தத்தை சட்ட விரோதமாக்கினால் அதன் மூலம் உற்பத்தியை பெருக்க முடியாது," என்று கூறியுள்ளது.

சம்பந்தப்பட்ட கட்சிகள் தங்களுக்குள் சமரசம், பேச்சு வார்த்தை மூலமாக தகராறுகளை தீர்த்துக் கொள்ள சர்க்கார் உதவவேண்டும். ஆனால் அதேசமயத்தில் சமரசம் தோல்வியடைந்தால் சர்க்கார் தலையிட வேண்டும்.

Edited, Printed & Published by G. Alavandar, at Janasakti Press, Subodhaya Buildings, [illegible]3, Mount Rd, Madras 6.